Regd No. M. 4900. • 16-பக்கங்கள்.

# குடி அரசு

ESTD. 1924

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 21 } ஈரோடு 21-8-1948 சனிக்கிழமை { மலர் 50.

## தேவையில்லாத மொழி.

★

சில்லரை கிடைப்பதில்லையே (எ) மெட்டு

1. தேவையே இல்லாத மொழியே இந்தி நமக்குத்
தேவையே இல்லாத மொழியே படிக்கச்சொல்லி
தேடிக்கொள்வதேனோ பழியே கல்விமந்திரியே (தே)

2. பூவையர் சேய்களோடு புகுந்திட்ட சிறையும்
போர்முழக்கம் புரியும் பெரியாரின் உரையும்
தாலமுத்தோடு நட ராஜன் கல்லறையும்
தமிழினுக்காக அன்று சமர் நடந்திட்டதென்று
தந்ததொரு பாடம் மறந்து மீண்டும் நுழைக்க
வந்ததேனோ நீரும் விரைந்து நமக்குச் சற்றும் (தே)

3. கட்டாயமில்லையெனக் காணுமோர் அறிக்கை
கற்றோர்க்கே உத்தியோகம் என்றிடும் கிறுக்கை
முட்டாள்தனம் நிறைந்த முழுவெள்ளப் பெருக்கை
முற்றும் உணர்ந்ததமிழர் சற்றும் அஞ்சப்போவதில்லை.
மூண்டதுபார் போரும் விரைவில் உமைஎவரோ
தூண்டிவிடுகின்றார் மறைவில் நமக்குச்சற்றும் (தே)

4. தமிழ்மொழியாம்தமிழைப் படிக்கவும் வசதி.
தானின்றி ஏழைமக்கள் படுகின்றார் அவதி
பேய்மொழி இந்தி எந்த விதத்திலே தகுதி நம்
பிள்ளைகளுக்கே மிகுந்த தொல்லையென்பதை யுணர்ந்தும்
பித்தலாட்டப் பேச்சுப்பேசுறீர் அடக்குமுறைச்
சட்டத்தை எடுத்து வீசுறீர் நமக்குச் சற்றும் (தே)

5. செய்வதற்குளத்தனையோ வேலைகள் இருக்க
செந்தமிழ் நாட்டுமக்கள் யாவரும் வெறுக்க
அய்யா மந்திரியாரே எம் வாழ்வினைக் கறுக்க
ஆரியர்க்கடங்கி அவர் கூறிடும்விதத்திலெல்லாம்
ஆட்சி யெனும்வண்டி யோட்டுறீர் அதிக்கிரம
காட்சியை நடத்திக்காட்டுறீர் நமக்குச் சற்றும் (தே)

6. மந்திரியாரே உமக்குத் தெரியுமோ இந்தி
மரியாதையாகக்கற்றுக் கொள்ளுவீர் முந்தி.
வந்து எங்களைப்படிக்கச் சொல்லுமதன் பிந்தி
வாதம் புரியத்துணிந்தால் தேதியைக் குறிப்பிடுவோம்
வாரும்பொது மக்களிடையே. எங்கள் கேள்விகட்கு
கூறிடுவீர் தக்கவிடையே. நமக்குச் சற்றும் (தேவை)

வி. எஸ். நடேசன்.

சிறுவர் பகுதி.

# வஞ்சம் தீர்ந்தது.

"தாதா"

[பகுத்தறிவு மிக்க கருத்துகளை நகைச்சுவை ததும்ப சிறுவர்களுக்கேற்ற நடையில் வாரந்தவறாமல் இப்பகுதியில் தாதா அவர்கள் எழுதுவதாக உறுதி கூறியிருக்கிறார்.]

ஒரு ஊரிலே, தன்மதி என்ற பெயருடைய மன்னன் ஒருவன் இருந்தான். அவனுக்கு துன்மதி என்ற பெயருடைய ஒரு தம்பியும் உண்டு. துன்மதி தன்மதியின் அரசை அபகரித்துக் கொள்ள வெகு காலமாக எண்ணிவந்தான்.

அந்தக்காலத்தில் ஆரியர்கள் காட்டில் வாழ்ந்தனர். அங்கு பெரிய பெரிய குழிகளைத் தோண்டி அதில் விறகுகளையும் சருகுகளையும்போட்டு நெருப்பை மூட்டி, நாட்டில் உள்ள உணவுப் பொருள்களாகிய அரிசி, பருப்பு, நெய், இறைச்சி முதலானவைகளைக் கொண்டு வந்து அந்நெருப்புக் குழியில் கொட்டி நாசஞ்செய்து நாட்டில் உணவுப் பஞ்சத்தை உண்டாக்கி வந்தார்கள்.

அதனால், தன்மதி கடுங்கோபங்கொண்டு எங்கெங்கு நெருப்புக் குழிகளுண்டோ அங்கெல்லாம் சென்று அந்நெருப்புக் குழிகளை அழித்து அந்த ஆரியர்களைப்பிடித்துச் சிறையில் அடைத்துவந்தான்.

ஒருநாள் நடுக்காட்டில் தனிமையாக ஒரு குடிசை இருப்பதை அறிந்து, அங்கு ஏதாவது நெருப்புக்குழிவேலை நடைபெறுகிறதா வென்று பார்க்கச் சென்றான்.

அங்கு நெருப்புக் குழியில்லை. ஆனால், ஒரு பெண் தன்னந்தனியே இருப்பதைக் கண்டான். தன்மதிக்கு இரக்கம் பிறந்தது. 'ஏ, பெண்ணே! நீ ஒரு அனாதையாக இக் காட்டில் தனியே இருக்க வேண்டாம். என்னோடு வா, நான் இந்நாட்டின் மன்னன், உன்னைக் காப்பாற்றுவேன்' என்றான். அதற்கு அக்காட்டுப் பெண் சம்மதித்து வந்து அரமனையில் சுகமாக இருந்தாள்.

அதற்குப் பிறகு, ஆண்டுகள் பனிரெண்டாகிவிட்டன. ஆனால், துன்மதியின் கெட்ட எண்ணம் அவனைவிட்டு விலகவில்லை. ஏதாவது துரோகம் செய்தேனும் அண்ணன் அரசை அபகரித்துக் கொள்ள வேண்டும் என்ற நினைவுக்கும் வந்துவிட்டான்.

அதற்கேற்ப அத்தனை ஆண்டுகளுக்குப்பிறகு, அக்காட்டுப் பெண்ணுக்கு ஒரு கணவன் இருப்பதாகத் தெரிய வந்ததும், துன்மதி துள்ளி எழுந்தான் சூழ்ச்சி செய்ய வழி பிறந்து விட்டது என்று.

காட்டுப் பெண்ணின் கணவன் அனுப்பிய தூதன் வந்து காட்டுப் பெண்ணைக்கண்டு 'உன்கணவன் உன்னைத் தேடிக் கண்கலங்கி நிற்கிறார். நீ உடனே என்னோடு வா' என்று அழைத்தான். காட்டுப் பெண் 'வரமுடியாது' என்று தூதனிடம் சொல்லிவிட்டாள்.

அதுவும் துன்மதியின் சூழ்ச்சிக்கு அநுகூலமாகிவிட்டது. உடனே துன்மதி அந்தத் தூதனை அழைத்துக்கொண்டு தன்மதியிடம் சென்று, தன்மதிக்கும், தூதனுக்கும் தடித்த வாக்குவாதம் நடக்கும்படி சூழ்ச்சிகள் செய்தான்.

தன்னை அவமரியாதையாகப் பேசிய தூதனையும், துன்மதியையும் தன்மதி மன்னித்து விரட்டிவிட்டான்.

விரட்டப்பட்ட தூதன், துன்மதியின் பேச்சைக்கேட்டுத் தன்மதியின் அரமனையில் தீ வைத்து விட்டுச் சென்றான்.

உணவுப் பொருள்களை மட்டும் நெருப்பில் போட்டுக் கொளுத்தும் ஆரியர்கள், தன்மதியின் அரமனையே தீக்கிரையானது கண்டு ஆனந்தப்பட்டனர்.

கடைசியாக, அக்காட்டுப் பெண்ணின் கணவன், தன்மதி போன்ற மற்றொரு நாட்டுச் சகோதரத் துரோகியின் படை பலத்தாலும், துன்மதியின் அய்ந்தாம்படை வேலையாலும் தன்மதி மீது போர் தொடுத்து வெற்றி பெற்றான்.

பிறகு, தன்னை விட்டுப் பனிரெண்டு வருடங்களுக்கு முன் பிரிந்து அரமனைச்சுகம் அநுபவித்து வந்த அக்காட்டுப் பெண்ணைக் கண்டு பிடித்தான். அவளிடம் கடுங்கோவத்தோடு 'நான் அனுப்பிய தூதனிடம் நீ 'வரமுடியாது' என்று சொன்ன காரணம் என்ன' என்று கேட்டான். அவள் ஏதோ சமயத்திற்குத் தகுந்த பதிலைச் சொன்னாள். அவன் அதில் திருப்தி அடையாமல் அவளை நெருப்புக்குழியில் போட்டு எரித்து சாம்பலாக்கித் தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொண்டான்.

தூதன் அக்காட்டுப் பெண்ணைப்பற்றி அவன் கணவனிடம் வந்து விசாரித்தபோது 'வஞ்சம் தீர்ந்தது' என்று பதிலளித்தான். இராமாயணம் முடிந்தது.

சிறுவர்களே! இதுதான் நம் திராவிடத்தில் நடந்த உண்மையான இராமாயணமாக இருக்க வேண்டும்.

## 5-ம் நாள்.

சென்னை ஆகஸ்ட் 16.

மறியல் இன்று காலை 8-40 மணிக்கு தொடங்கி 10-30 வரை நடந்தது. ஊர்வலத்தில் பல தாய்மார்கள் கலந்து கொண்டனர். பல தொழிலாளத் தோழர்கள் மறியலைக் காண்பதற்காக வந்திருந்தனர்.

முத்தியாலுபேட்டை பள்ளி மாணவர்களில் 5-வது முதல் 9-வது வகுப்புவரையுள்ள மாணவர்கள் சுமார் 300 பேர் பள்ளியைவிட்டு வெளியேறி தொண்டர்களுடன் கலந்து இந்தி எதிர்ப்பு ஒலி எழுப்பினர்.

பின் இந்த மாணவர்கள் கூட்டம் கூட்டமாகப் பிரிந்து மற்ற பள்ளிக்குச்சென்று இந்தி எதிர்ப்பு ஒலிகளை முழக்கியதால் சில பள்ளிகளுக்கு உடனே விடுமுறையளிக்கப்பட்டன.

மாணவர்களின் இந்தப் போக்கால் சில மாணவர்கள் போலீஸாரால் அடிபடவும் நேர்ந்தது.

மறியல் நடக்கும் தொண்டை மண்டலப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் 112 பேர் மறியல் செய்வதில் தங்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமெனத் தலைவர் பெரியார் அவர்களிடம்கையெழுத் திட்டுக் கொடுத்தனர்.

# இந்தியை எதிர்ப்பது என்?

★

இந்தி எதிர்ப்புப் போர் மூண்டு விட்டது. தமிழின் பெருமையை உணர்ந்த தமிழர்கள் அனைவரும் போராட்டத்தில் இறங்கத் துணிந்து விட்டனர். இப்போராட்டத்தில் எல்லாக் கட்சியினரும் தமிழர் என்ற முறையில் பேதமில்லாமல் ஈடுபடுவார்கள். ஆனால், இந்தி மொழி, ஏன் இவ்வளவு ஆடம்பரமாக, அவசரமாக, கட்டாயமாகப் புகுத்தப்படுகிறது என்பதை உணர்ந்தவர்கள் மிகச் சிலர்தான் இருக்க முடியும். காரணம், தமிழ் நாட்டைப் பொறுத்த மட்டில் அரசியல் அறிவு குழந்தைப் பருவத்தில் தான் இருந்து வருகிறது. அதிர்ஷ்ட வசமாகத் திராவிடர் கழகத்தாராகிய நமக்கு அந்தக் குறையில்லை. பெரியார் இராமசாமியின் பரந்த முதிர்ந்த 'அரசியல் ஞானம்' நம்மை மேலான நிலைமையில் வைத்து விட்டது. நான் இவ்வாறு கூறுவது திராவிடர் கழகத்தைச் சேராத வேறு கட்சியினருக்கு ஏளனமாகத் தோன்றலாம். அதைப்பற்றி நான் கவலைப்படப் போவதில்லை. ஏனெனில், நம்மை ஏளனமாக நினைப்பவர்கள், நாம் என்ன இலட்சியத்திற்காகப் போராடுகிறோமோ, அதே இலட்சியத்திற்காக நம்மைவிடப் பன்மடங்கு வேகமாசப் போராடப் போவது உறுதி. இன்னும் சில ஆண்டுகளில் அந்த நிலைமையைக் கண்ணால் கண்டு களிக்கப்போகிறோம்.

என்னைப் பொறுத்த மட்டில், திராவிட நாட்டில் "பெரியார் இராமசாமியைவிட அரசியல் அறிவு மிகுந்தவர்கள் யாருமே இல்லை" என்று வானத்திலிருந்தும் கூவுவேன்.

அன்று 1937ம்ஆண்டில், ஆச்சாரியார் ஆட்சிப் பீடத்தில் இருந்த போது, கட்டாய இந்தி நுழைக்கப்பட்டது. பெரியார் இராமசாமி ஒருவர்தான் அதை எதிர்க்கவேண்டுமென்று கூறினார். அன்று, அவருக்கு வேறு இயக்கத்தினர் துணை வரவில்லை. இன்று, அவருடைய அரசியல் ஞானம் மக்களால் ஓரளவு ஒப்புக்கொள்ளப்பட்டு விட்டது. ஒப்புக்கொள்ளாதவர்களும் மதில்மேல் பூனையாகத் திகைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது ஒன்றே அவருடைய பெருமைக்குப் போதுமானதாகும். இந்தி, அந்நியமொழி. அது தமிழ் நாட்டில் நுழைந்தால் தமிழைக்கெடுக்கும். இவ்வளவு தானே? இதைப் பெரியார் கண்டு பிடித்து விட்டாராக்கும்? அப்பாடா! இதற்காகப் பெரியாரை மிஞ்சினவர்கள் யாருமே இல்லை என்று கூறுகிறாயே! அப்பாவி! என்றும் சிலர் நினைக்கலாம். இவைகளை எல்லாம் எதிர்பார்த்துத்தான், இந்த நாட்டில் அரசியல் அறிவு குழந்தைப் பருவத்தில் இருக்கிறதென்று கூறினேன்.

இனி இந்தியால் வருங்கேடுகளையும் அது ஏன் இவ்வளவு கட்டாயமாக நம் தலைமீது ஏற முயற்சிக்கிறது என்பதையும் கூறுகிறேன். இந்தி நுழைந்தால் தமிழ் கெடுவதுமட்டுமல்ல. தமிழர் (திராவிடர்)களே கெட்டு நாசமடைவார்கள் என்பது உறுதி.

ஏனெனில், இந்தி கட்டாயமாக்கப்படுவதற்கு அவினாசிலிங்கமோ, ஓமந்தூராரோ காரணமல்ல. "இந்திமொழியை நாடெங்கும் பரப்ப வேண்டும்" என்கிறமுயற்சி இன்று நேற்றுமுளைத்ததுமல்ல. இந்தியா என்று ஒரு நாடிருப்பதாகவும் அந்த நாட்டுக்கு ஒரு தேசிய மொழி ஏற்படுத்தப் போவதாகவும் சொல்லுகிறார்களே, அதுவும் உண்மையல்ல. பின் என்னவெனில், வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்களால், தெற்கே குமரி முனையும், வடக்கே இமயமலையும், மேற்கே சுலைமான் மலையும், கிழக்கே அஸ்ஸாம் குன்றுகளையும் எல்லையாகக்கொண்ட, இந்தியா என்கிற பூகண்டத்தை ஒரு குடைக் கீழ் ஆள்வதற்காகச் செய்யப்படும் முயற்சிகளில்,முதன்மையானதாகும் இந்தி கட்டாய நுழைப்பு என்பதை நம்மவர் (திராவிடர்)கள் உணரவேண்டும்.

இந்தி மொழி தேசிய மொழியாக இருக்குமானால், அதைப் பரப்பவேண்டும் என்று பெரும் பொருட் செலவுடன், அரசியல் அதிகாரத்துணையுடன் நுழைக்க வேண்டியதில்லை. இந்தியைத் 'தேசிய மொழி' என்று சொல்பவர்கள், ஒன்று தேசிய அறிவில்லாதவர்களாக இருக்கவேண்டும் அல்லது நயவஞ்சகப் பித்தலாட்டக்காரர்களாக இருக்க வேண்டும். இவ்விரண்டிலொரு பெயரிட்டுத்தான் நாம் அவர்களைக் குறிப்பிட வேண்டியவர்களாக இருக்கிறோம். இந்திய தேசிய மொழி என்று கூறுவோரின் கூற்று எப்படி இருக்கிறதென்றால், வழியிலே போகிற பெண்ணிடம், ஒருவன் ஒரு குழந்தையைக்கொடுத்து, இது உன்னுடைய குழந்தைதான், இதை நீ நன்றாக வளர்த்துக்கொள், என்று கெஞ்சுவதைப்போல் இருக்கிறது. அந்தந்த நாட்டு மக்கள் பேசுகின்ற மொழியே, அந்தந்த நாட்டுக்கும் தேசிய மொழியாகும். அதன்படி தமிழ், தமிழ் நாட்டிற்கும் இந்தி அல்லது இந்துஸ்தான் வடநாட்டில் அந்தந்த மொழி வழங்கும் பகுதிகளுக்கும் தேசியமொழிகளாகும். தமிழ்நாட்டின் தேசிய மொழியாகிய தமிழைக்கட்டாயமாகப்படியுங்கள் என்று அரசாங்க உத்திரவு தேவையில்லை. அதுபோலவே வடக்கே இந்துஸ்தானியைப் படிப்பிக்க பிரசாரமோ, அர

(தொடர்ச்சி 13-ம் பக்கம்)

## 6-ம் நாள்.

★

சென்னை ஆகஸ்ட் 17.

இன்று 9-15 மணிக்கு ஊர்வலம் தொடங்கி 10-20 வரை மறியல் நடந்தது. இன்றைய மறியலில் தோழியர் கே. அலமேலு அம்மையார் அவர்களும் சர்வாதிகாரியின் உத்திரவு பெற்றுக் கலந்து கொண்டனர்.

நேற்று முத்தியாலுப் பேட்டை உயர் நிலைப்பள்ளிமாணவர்களால் சில அசம்பாவிதங்கள் நேரிட்டிருப்பதைக் கேட்டு வருந்துகிறேன்; இந்நிகழ்ச்சிக்கும் கழகத்திற்கும் சம்பந்தமல்ல, இதுபோன்ற செயல்களுக்குப் பொது மக்கள் ஆதரவு தரக்கூடாது, மாணவர்கள் இந்தி வகுப்புக்குச் செல்லக் கூடாது என்பதுதான் நமது திட்டமே ஒழியப் பள்ளியைப் பகிஷ்கரிப்பதல்ல. என்று சர்வாதிகாரி அவர்கள் இன்று ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

பெரியார் அவர்கள் இவ்வறிக்கையை ஆதரித்து வலியுறுத்தியிருக்கிறார்கள்.

# மறியலுக்கு முதல் நாள்....

## பெத்துநாய்க்கன் பேட்டையில் பெரியார்.

★

சென்ற வாரத் தொடர்ச்சி.

இப்படிப்பட்ட தமிழ் மாணவர்களால் எப்படி வடமொழியிலேயே ஊறிய ரத்தம் பாய்ந்துகொண்டிருக்கும் பார்ப்பனச் சிறுவர்களோடு போட்டிபோட முடியும்? இதைத்தான் நான் ரெட்டியாரிடம் எடுத்துச் சொன்னேன். இதை யெல்லாம் கேட்டுக் கொண்டு கடைசியாக ரெட்டியார் கூறினார். (ரெட்டியார் கூறினார் என்றால் சர்க்கார் கூறியது என்று தான் அர்த்தம் செய்துகொள்ளவேண்டும்) "நாம் ஹிந்துஸ்தான் யூனியனில் இருக்கிறோம். ஆதலால் ஹிந்துஸ்தான் யூனியன் பாஷையாகிய ஹிந்தியை படித்துத்தான் ஆகவேண்டும். கண்டிப்பாகப் படித்துத்தான் தீரவேண்டும்" என்று. இதற்குத்தான் "கட்டாயமில்லை" என்று அர்த்தமா என்று கேட்டுவிட்டு, ஹிந்தியை எக்காரணம் கொண்டும் நம்மால் ஏற்கமுடியாது என்று கூறிவிட்டேன்.

எனவே ஹிந்தி நுழைப்பை எதிர்த்துத்தான் ஆகவேண்டும். அவர்கள் ஹிந்தியைக் கைவிடுமாறு செய்யப்படும் வரைக்கும், அந்த அளவுக்கு நமது போராட்டத்தை நடத்தித்தான் ஆக வேண்டும்.

### ஆச்சாரியாரின் நேர் தம்பி!

இன்று ஹிந்தி எதிர்ப்புப்பற்றிச் சர்க்கார் அறிக்கை ஒன்று வெளிவந்துள்ளது. அதைக் கூட்டத்திற்கு வரும்போதுதான் பார்க்க நேரிட்டது. அவ்வறிக்கையில் ரெட்டியார் கூறுகிறார் "மக்களுக்குப் பொறுப்பு வாய்ந்த பொதுஜன சர்க்கார், பொதுநலனை முன்னிட்டு ஏதாவதொன்றைக் கட்டாயமாக்கினாலும் அதை ஆக்ஷேபிக்கக்கூடாதென்பதை முதலில் குறிப்பிட விரும்புகிறேன்" என்று. ராஜகோபாலாச்சாரியார்கூட முன்பு இதையேதான் கூறினார். இவர் அவரது நேர் தம்பி. அதனால்தான் பழைய ரிக்கார்டைப் பார்த்து அப்படியே காப்பியடித்திருக்கிறார். "மக்களுக்குப் பொறுப்பு வாய்ந்த பொதுஜன சர்க்கார்" என்றால் அச்சர்க்கார் பொது மக்கள் விருப்பப்படி நடக்கவேண்டுமா, அல்லது பொது மக்கள் விருப்பத்திற்கு நேர்மாறாக நடக்கவேண்டுமா? ஓட்டுக் கொடுக்கும் வரைதான் இவர்கள் பொது மக்கள் என்று கருதப்படுவார்களா? அல்லது ஓட்டுக்கொடுத்து விட்டதும் இவர்கள் இறந்து போய் விட்டார்கள் என்று ரெட்டியார் நினைத்துக் கொண்டிருக்கிறாரா?

### அறிவா? ஆணவமா?

"நாம் இவர்களுக்கு ஓட்டுக் கொடுத்தால் இவர்கள் நம் விருப்பத்தை ஈடேற்றிவைப்பார்கள்" என்றுதானே ஓட்டுக் கொடுத்தவர்கள் நினைத்திருப்பார்கள். அவர்களுடைய விருப்பப்படி நடப்பதுதானே ஓட்டுப்பெற்றவர்களுக்கு ஒழுங்கும், கடமையும், அறிவுடைமையுமாகும். மக்களுக்குப் பொறுப்பு வாய்ந்த பொதுஜன சர்க்கார் என்று தம்மை விளம்பரப்படுத்திக் கொள்ளும் ரெட்டியார் சர்க்கார், பொது மக்கள் விருப்பத்திற்கு மாறாக ஹிந்தியைத்திணித்து விட்டு, "பொது நலனை முன்னிட்டு ஏதாவதொன்றைச் சர்க்கார் கட்டாயமாக்கினால் அதை ஆக்ஷேபிக்கக்கூடாது" என்று கூறுகிறதென்றால் அது அறிவுள்ள சர்க்காரா? ஆணவம் பிடித்த சர்க்காரா? மக்களின் பிரதிநிதிகள் என்று கூறிக்கொள்ளும் இம்மந்திரிமார்களின் யோக்கியதை இன்றுதான் எனக்குப் புரிந்தது. பொறுப்புவாய்ந்த சர்க்காராம்! பொது மக்கள் சர்க்காராம்! என்றாலும் மக்கள் விருப்பத்துக்கு விரோதமாக ஏதாவதொன்றைக் கட்டாயமாக்கினால் அதை ஆக்ஷேபிக்கக் கூடாதாம். என்னே அநியாயம்!

ரெட்டியார் மேலும் குறிப்பிடுகிறார், "தென்னிந்தியா இந்திய யூனியனில் ஒரு பகுதியே ஆகும்" என்று. தென்னிந்தியாவை இந்திய யூனியனில் பிணைத்தது காங்கரஸ்காரராகிய நீங்களா அல்லது திராவிடப் பொது மக்களா? "ஹிந்துஸ்தானி இந்திய யூனியனின் பொதுப்பாஷையாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது" என்று மேலும் கூறுகிறார். அங்கீகாரம் செய்தவர்கள் யார்? காங்கரஸ்காரர்கள்தானே. காங்கரஸ்காரர்கள் அங்கீகரித்து விட்டார்கள் என்றால், நாட்டு மக்கள் எல்லோருமே அங்கீகரித்து விட்டார்கள் என்று அர்த்தமா? அல்லது அதிகார மமதை இப்படி அறிக்கைவிடச் செய்கிறதா?

### வெள்ளையனையும் மிஞ்சி விட்டார்கள்.

"இந்தியாவின் பொதுப்பாஷையாகிய ஹிந்துஸ்தானியை ஒரு குறைந்த பக்ஷ அளவுக்கேனும் கற்றுக்கொண்டிராவிடில் யூனியன் சர்க்காரில் தென்னிந்திய மக்கள் தங்களுக்கு நியாயமாக உரித்தான பங்கைப்பெற முடியாமற் போய் விடும்" என்று குறிப்பிட்டுள்ளார். வெள்ளையன்கூட இப்படிக் கூறவில்லையே, இங்கிலீஷ் கற்றாலொழிய நமக்கு நியாயமான உரிமை கிடைக்காதென்று. இஷ்டப்பட்டவர்களைத்தானே ஆங்கிலம் படிக்கச் செய்தான். அவனையும் மிஞ்சி விட்டார்களே இந்தச் சுதந்தர வாதிகள். அதுவும் ஒரு திராவிட மந்திரி இப்படிக் கூறுகிறாரே. ஹிந்தி தெரியாததால் நாளை நமது பேர் ஓட்டர் லிஸ்டிலிருந்துகூட எடுபட்டு விடும் போல் இருக்கிறதே.

### நாணயமும் தியாகமா?

ஹிந்தி படிக்கப்படவேண்டிய அவசியத்தை இவ்வளவு வற்புறுத்திக் கூறிவிட்டு அடுத்தாற்போல் கூறுகிறார், "ஒரு மாணவர் தம் பெற்றோர்கள் விருப்பத்திற்கு எதிராகவோ அல்லது தம் விருப்பத்திற்கெதிராகவோ ஹிந்துஸ்தானியைப் படித்துத்தான் தீரவேண்டுமெனக் கட்டாயப்படுத்தப்படவில்லை" என்று. இது முன்னுக்குப் பின் முரணாக இல்லையா? ஹிந்தி இந்நாட்டுப் பொது மொழியாக அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. எனவே அதை ஒவ்வொருவரும் தெரிந்திருக்கவேண்டியது அவசியம் என்று முதலில் கூறியுள்ள அமைச்சர், பிறகு கட்டாயமில்லை என்று கூறி மக்களை ஏமாற்றுவதற்காகத் தம் நாணயத்தைக் கூட கொஞ்சம் தியாகஞ் செய்கிறார்.

இன்னும் ஏதேதோ கூறிவிட்டு கடைசியாக "மறியல் செய்யும் இடங்களில் கூட்டம் கூடாமல் மறியல் செய்பவர்களைத் தனியே விட்டுவிடுமாறு பொது மக்களையும் நான் கேட்டுக் கொள்கிறேன். மறியல் செய்பவர்களுக்கு அநுதாபிகளும், அவர்களுக்கு விரோதமாக இருப்பவர்களும் மறியல் செய்பவர்களுடன் கூடிநிற்பது அநுமதிக்கப்படமாட்டாது" என்று. இதைக் கூறியதற்காக கனம் முதல் மந்திரியார் ரெட்டியார் அவர்களை மனமார வாழ்த்துகிறேன். நீங்களும் வாழ்த்துக் கூறுங்கள்! ராமசாமி ரெட்டியார் வாழ்க என்று வாழ்த்தொலி செய்யுங்கள்! (வாழ்த்தொலி அவ்விதமே செய்யப்பட்டது)

மேலும் கூறுகிறார், "மாணவர்களுக்கு எவ்விதத் தடை செய்வதையும், அநுமதிக்க முடியாது. அத்து மீறி நடப்பவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள்" என்று. நாளை போராட்டம் துவங்குகிறது. சர்க்காரும் தம் இஷ்டம்போல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளட்டும். நீங்கள் மட்டும் ரெட்டியார் அறிக்கைப்படி, சர்க்கார் அறிக்கைப்படி அமைதியாக நடந்து கொள்ளுங்கள். வெற்றி நமக்கு நிச்சயம் கிடைக்கும்" என்று கூறி முடிக்க, அடுத்து தோழர் அண்ணாத்துரை அவர்களும் தோழர் சி. டி. டி. அரசு அவர்களும் பேசினர்.

(தொடர்ச்சி 12ம் பக்கம்)

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

கதை கற்பனை.

சிறுகதை

முதற்பருவம்.

# அவனிட்ட விதைகள்!

போட்டி

எண் 11.

எழுதுகோல் ஏந்தியிருந்தபோது எத்தனையோ இலக்கிய இலபங்களை அள்ளிக்கொடுத்த அதே கை, இன்று எண்ணற்ற இருப்புக் கருவிகளை இயற்றுகின்றது. இக் பாலையும் இங்கர்சாலையும் இழுத்துப் பேசிய வாய், இன்று "இந்த அரிவாள் செய்ய ஆறணா கூலி" என்றல்லவா கூறுகின்றது. இது ஊராரின் உரையாடல் தான அவனைப் பற்றி.

சுந்தரம்...ஆம்...அவன்தான், 10-ஆண்டுகட்கு முன் அன்பொழுகப் பேசிவந்த அதே சுந்தரம்தான். அவனைக் கண்டேன். மண்டியது உள்ளத்திலே மயக்கம். பார்ப்போரைத் தன்வயமாக்கும் அவனது பளிங்குப் பார்வை—புன்னகையோடு கூடிய பொலிவு—மனத்தூய்மையை வெளியில் எடுத்துக் காட்டும் மாசற்ற வெள்ளுடை—கடல் மடைதிறந்தாலென்ன கனிரசப் பேச்சு—எல்லாம் எங்கே போயின அவனை விட்டு? 10-ஆண்டுகளுக்குப் பிறகு, கொல்லுலைக் கூடத்தில் சோபிதமிழந்து உட்காா்ந்திருக்கும் சுந்தரத்தைக் கண்டதும், மேலே நீட்டிய எண்ண அலைகள் ஒன்றன் பின் ஒன்றாய் என்னைத் தாக்கின. திகைத்துஉட்கார்ந்தேன். "என்னப்பா முத்து! சத்தற்றவன் போல் கிடக்கிறாய்" என்று என் நண்பன் நடராசன் கூறியதும் தான் உணர்வு பெற்று அவனுடன் செல்லலுற்றேன்.

*   *

"ஏனப்பா, நீங்கள் தான் நன்றாக ஜாதகம் கணித்திருந்தீர்களே! ஜபதபங்களெல்லாம்......" என்று 10-வயது பலராமன் தன் தந்தை சம்பு சாஸ்திரியிடம் கூறத் தொடங்குமுன், இடைமறித்து, "அடியே அலமேலு, ஒன் கொழுந்தை பேத்துறதை வந்து பார்டி. (மனைவி அருகில் வந்ததும்) ஒன் ராமு சூத்ரன்களைப்போல் பேசறதைப் பார்டி" என்றார். "எம்பா ஜபதப, சாஸ்திரம் எல்லாம் பார்த்தீர்கள், நம்ம கமலா அக்கா மொட்டச்சியாகி விட்டாளே, அப்படியாகில் தங்கள் கல்யாண மந்திரம் வெறும் கப்சாவா? என்றான் பையன். மழலைச் சொல் கேட்டு மகிழவேண்டிய தந்தை பலராமனுக்குத் தந்தது பலமான அடிகள்.

*   *

"அட போய்யா...நான் தான் அடிக்கடி உனக்கு சொல்லியிருக்கேனே, மத்யானம், அந்திநேரம், விடியற்காலை, ராத்திரி இந்த நேரத்திலே அந்த ஆலமரத்தண்டை போகக் கூடாதுன்னு. நீ கேட்டியா? தனியா போயிருக்கான் உன் மகன். முனி அடிச்சுப் புட்டது, இனி பொளச்சா மறு பிறப்பு" என்றார், படுக்கையில் கிடக்கும் பரந்தாமனுக்குத் தேறுதல் மொழி கூறச்சென்ற தெட்சிணா மூர்த்திப் பிள்ளை, பரந்தாமனின் தந்தையிடம். "ஏனப்பா, ஆறுதல் கூறவந்த இடத்தில் ஆபத்தை விளைவிக்கும் பேச்சு. "கண்டது பாம்பு, கடித்தது மாங்கொட்டை" என்ற பழமொழி அறியாதவர்களா? பேயும் பிசாசும் உலகில் இருந்தால் மனிதன்

> ## தோழர்களே!
>
> இதற்குமுன் 10 கதைகளையும்
>
> படித்தீர்களா?
>
> இதையும் படியுங்கள்!
>
> இன்னும் 2 கதைகள்
>
> பிரசுரிக்கப்படும்.
>
> அதையும் படியுங்கள்!
>
> பிறகு தீர்ப்புக் கூறுங்கள்!

வாழ்க்கை நடைபெறுமா? விஞ்ஞானம் விர்த்தியாகுமா?" என்றான் பிள்ளைவாளின் பிள்ளை 14 வயதுப் பாண்டியன். "அப்பொழுது இரத்தம் கக்கியது;" என்றார். "பயத்தால் இரத்தக்குழல் வெடித்திருக்கும். என்னப்பா, பெரியார் இராமசாமி காலத்திலா பேய், பிசாசுகள் உயிரோடு உள்ளன" என்றான். பெரியார் என்ற வார்த்தையைக் கேட்டதும் புலியெனச் சீறி விழுந்தார் தந்தை. பையனை நையப்புடைத்தார், வீட்டை விட்டு விரட்டினார்.

*   *

"நம்ம வேலைக்காரி குப்பாயி, திராவிடச்சிதானே, இந்த நாட்டுப் பூர்வ குடிதானே, எம்பா, அவ நம்ம ஆத்திலே வேலைசெய்து புழைக்கிறா', என்றான் 11-வயது பத்மநாபன். "எல்லாம் அவரவர் தலைவிதி" என்றார் தந்தை. விட்டானில்லை பையன். "நாம் மத்யாசியாவிலிருந்து பிழைக்க வந்த நாடோடிக் கூட்டந்தானே. வரம் கொடுத்தவன் தலையில் கையை வைத்து வாழ்கிறோமே. என்னக்கியாவது நம்மளை அடிச்சு, நம்ம நாட்டுக்கு விரட்டிடமாட்டார்களா?" என்றான். கருத்துமிக்க சொற்கள் கண்டு கலங்கினார் வரலாற்று வல்லுநர் வரதாச்சாரி. மைந்தனை விட்டார். ஆனால் மார்க்கந்தேடினார், மகனுக்கு ஏற்பட்ட நிலையை மட்டந்தட்ட.

*   *

"கிராஜுவேட்டாக இருந்து நாமெல்லாம் என்ன சார் பண்றது? நீங்க ஒரு பி. ஏ. எல். டி. நான் ஒரு பி. ஏ. பி. எல். அவர் ஒரு எம். ஏ. இருந்தென்ன? ஊரிலே இம்மாதிரி அவமானப்படக்கூடாது சார் நாம். நம் கதர் வேஷ்டிக்குத் தான் மதிப்பேது சார். ஒரு செகண்டரி ஸ்கூல் டீச்சர், அதுவும் கேவலம் தமிழ் வாத்தி, நம்மளை பொது மேடையில் அவமானப் படுத்தறதுன்னா, அதை விடக் கேவலம் வேறென்ன சார் இருக்கு?" என்றார் சாமிநாத சர்மா. என்ன சார் நடந்தது. நானில்லையே என்றார் எல். டி. "மன்னர் பிறந்த நாள் கொண்டாட்டத்தில் ஆரிய கலாச்சாரத்தை விளக்கிப்பேசினேன். சுந்தரம், என்னை பல் உடையும்படி, ஆரிய கலாச்சாரம் இழிவானது என்பதை நிரூபித்து அத்துடன் வகுப்புவாதப் பத்திரிகை விடுதலையையும் நம்ம 'கிளப்'பில் போடனும்னு கேட்கும்படி பொதுமக்களை கிளப்பி விட்டான். அவர்கள் எங்களை அடிக்காதது ஒன்றுதான் பாக்கி" என்றார் சர்மா. "அது செய்ய வேண்டியது தானே சார்" என்றார் இனப்பற்றுள்ள எல். டி. "ஓகோ, உங்களுக்கும் நாய்க்கன் வாடை வீசுகிறதோ" என்றார் சர்மா. எல். டி. எழுந்து சென்றார்.

*   *

இந்த இளையாட்டாங்குடிஉயர்நிலைப்பள்ளியில் சுந்தரம் தமிழாசிரியனாய் இருந்தபோது, அவனது கொள்கையினொழுகி வந்த மாணவர்கள் தாம், பலராமன், பாண்டியன், பத்மநாபன்.

அன்றொரு நாள் வரதாச்சாரி இல்லில் 7, 8, உருவங்கள் கூடின—ஏதோ முணுமுணுத்தன. ஒன்று எழுதியது. மற்றவை கையொப்பமிட்டன.

மறுநாள் "சார் தலைமையாசிரியர் கூப்பிட்டார்" என்று சொல்லிவிட்டு வேலையாள் சென்றான். மாணவர்களுக்கும்பாடம் ஆரம்பிக்கும் நேரம்.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)

# நான் யார்?

★

(ஈ. வெ. ராமசாமி)

அன்புள்ள திராவிட மந்திரிமார்களே நான் யார்?

உங்கள் சொந்த எதிரியா?
உங்கள் இன எதிரியா?
உங்கள் கொள்கை எதிரியா?
உங்கள் உத்தியோகம் பதவி பற்றி பொறாமைப்படுகிறவனா?

அல்லது இந்நாட்டை அன்னியனுக்கு காட்டிக் கொடுப்பவனா?

அப்படிச் செய்தாவது ஏதாவது பலன்பெறவேண்டும் என்கிற ஆசையிலோ நிலையிலோ உள்ளவனா?

இதுவரை:—

என் பொது வாழ்வின் பயனாக நான் ஏதாவது பலன் பெற்றவனா? அல்லது எனது வாழ்க்கைத் தரத்தையாவது உயர்த்திக்கொண்டவனா?

உண்மையில் —

நான் பார்ப்பன துவேஷியா?

எந்தப் பார்ப்பனருக்காவது நான் சொந்தத்தில் எதிரியா?

டாக்டர் சி. ராஜகோபாலாச்சாரி யாருக்கு நாளைக்குக் கருப்புக்கொடி பிடிக்கச்செய்ய வேண்டியவனாக நான் ஆனாலும் அவரிடத்தில் சொந்தத்தில் சிறிதாவது வெறுப்போ துவேஷமோ?

அல்லது —

அன்புக் குறைவோ மதிப்புக் குறைவோ எனக்கு உண்டு என்று அவராவது வேறு யாராவது சொல்ல முடியுமா?

தவிர —

1911-வது வருஷம் வரை நான் மைனர், ஒரு முரடன், 1911-ல் என் தகப்பனார் செத்ததுமுதல், அதாவது 1911 முதல் 1920-ம் ஆண்டு வரையில் நான்,

1. தேவஸ்தான கமிட்டி பிரசிடெண்ட்.
2. ஆனரரி மாஜிஸ்டிரேட்.
3. கோஆப்ரேடிவ் அர்பன்பாங்கிச் செக்ரட்டரி.
4. தாலூகா போர்ட் மெம்பர்.
5. ஜில்லா போர்ட் மெம்பர்.
6. 1914-ல் ஈரோட்டில் நடந்த கோவைஜில்லா காங்கரஸ் கான்பிரன்சுக்கு செக்ரட்டரி.
7. ஆனரரி வார்ரிக்ரூட்டிங் ஆபீசர்.
8. மகாஜன ஸ்கூல் செக்ரட்டரி.
9. ஈரோடு ரீடிங்ரூம் செக்ரட்டரி.
10. ஈரோடு முனிசிபல் வாட்டர் ஸ்கீம் செக்ரட்டரி.
11. வார் கமிட்டி செக்ரட்டரி.
12. வார்பண்ட் கலெக்‌ஷன்கமிட்டி பிரசிடெண்ட்.
13. ஓல்ட்பாய்ஸ் அசோசியேஷன் பிரசிடெண்ட்.
14. எஸ். அய். சேம்பர் ஆப் காமர்ஸ் சப் கமிட்டி மெம்பர்.
15. வருஷம் 900 ரூ. இன்கம் டாக்ஸ் (1920-ல்) அந்தக் காலத்தில் கொடுத்துவந்த வியாபாரி.
16. கடைசியாக முனிசிபல் சேர்மென் ஆகவும் இருந்தவன்.

ஈரோடு வாட்டர் வர்க்ஸ் வேலை முடிந்து திறப்புவிழா ஆற்றியதற்கு சர்க்காரில் எனக்கு சர். பி. ராஜகோபாலாச்சாரியார் சிபார்சு செய்த ராவ் பகதூர் பட்டத்தை மறுத்துவிட்டு, காங்கரஸ் சேவைக்கு ஆக என்று இவ்வளவு பதவிகளையும் ராஜிநாமா கொடுத்து, சிலவற்றை ஏற்க மறுத்து சன்யாசி வேஷம் கொண்டு ஆச்சாரியார், வரதராஜுலுநாயுடு விருப்பப்படி காங்கரசில் சேர்ந்தவன்.

18. இவைகளை ராஜினாமா கொடுத்தபிறகு கூட சர்க்கார் இன்கம் டாக்ஸ் அப்பீல்-கமிட்டி மெம்பராக என்னை வைத்து, கயிறு வியாபாரிகள் அப்பீலுக்கு தனி அப்பீல் அதிகாரியாக நியமித்தார்கள். இதற்கு தினம் 100 ரூபா. படி—$1\frac{1}{2}$ முதல் வகுப்புபடி.

19. காங்கரசுக்கு வந்த உடனே தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி காரியதரிசியானவன்.

20. அடுத்த ஆண்டு தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டி தலைவன் ஆனவன்.

21. தமிழ்நாடு காதி, வஸ்திராலய பவுண்டர் துவக்கியவன் ஆகவும் 5வருஷத்துக்கு தலைவனாகவும் தெரிந்தெடுக்கப்பட்டு தமிழ்நாட்டில் சுமார் 40 கதர் கடையும் 30, ஆயிரம் முதல் 100000 ரூ. வரை மாதம் கதர் உற்பத்தியும் செய்யும்படி ஏற்பாடு செய்தவன்.

22. 1924-ல் நான் பார்ப்பனீயம் பார்ப்பன ஆட்சி பிடிக்காமல் காங்கரசிலிருந்து வெளியேறி 1926 முதல் 1936 வரை ஜஸ்டிஸ் மந்திரிகள் நண்பனாக இருந்தவன். அக் கட்சிக்கும் சுய மரியாதை இயக்கத்துக்கும் பாடுபட்டவன்.

23. இவ்வளவு சம்மந்தத்திலும் பாட்டிலும் யாரிடமிருந்தாவது ஒரு சின்னக்காசு வரும்படியோ பட்டமோ, எனக்காவது எனக்கு வேண்டியவர்களுக்காவது, என்குடும்பத்துக்காவது, ஒரு சிபார்சோ பதவி லாபமோ ஏதாவது பெற்றவனா? ஆசைப்பட்டவனா?

24. நான் காங்கரசிலிருந்து வெளியேறியபின்புகூட காங்கரஸ் நிர்மாணத் திட்டத்தில் கதரைத்தவிர மற்றவைகளுக்கு ஆக உழைத்தவனே தவிர எதையாவது எதிர்த்தவனா?

25. இந்திவிஷயத்திலும்கூட இந்தி பள்ளிக்கூடம் தென் இந்தியாவில் 1922-ல் முதல் முதல் துவக்கத்திற்கு இலவச இடம், 15 மாணவர்களுக்கு இலவச சாப்பாடு கொடுத்து வந்ததோடு அதன் பண்டுக்கும் உதவி செய்து பெருந்தொகை வசூலித்து கொடுத்து உதவி செய்தவன்.

26. அன்றியும் காங்கரஸ் திட்டத்தில் பார்ப்பன ஆதிக்கம் தவிர மற்றப்படி நான் எதற்கு விரோதி?

27. இன்றுதானாகட்டும். எனது அரசியல் கொள்கை என்பதுகூட திராவிடநாடு வடநாட்டான் ஆதிக்கத்தில் இருந்து அரசியலிலும் பொருளாதாரத்திலும் பிரிந்து பர்மா, சிலோன் போல ஒருதனி சுதந்திர நாடாக இருக்க வேண்டும் என்பதைத் தவிர மற்றபடி காங்கரஸ் அரசியல் கொள்கையில் திட்டத்தில் நான் எதற்கு விரோதி?

28. இந்த திட்டத்திலும் என்னிடம் ஏதாவது இரகசிய முறை இருக்கிறதா?

29. திராவிடநாடு தனியாய் பிரிந்தால் மந்திரிமார்களே! பெரிய அரசியல்வாதிகளே!! திராவிட நாட்டுக்கு என்ன கெடுதி ஏற்படக்கூடும்? என்று இதுவரை நீங்களாவது சொன்னீர்களா?

இவை நிற்க. இனி எனது சமுதாய திட்டம்தானாகட்டும் வருணாச்சிரம தர்ம முறை ஒழிய வேண்டுமென்பதும், பார்ப்பன சமுதாயத்துக்கு எந்த துறையிலும் அவர்கள் எண்ணிக்கைக்கு மேற்பட்ட பங்கும் எண்ணிக்கைக்கு மேற்பட்ட உரிமையும் சராசரி வாழ்க்கை முறைக்கு மேற்பட்ட தன்மையும் இருக்கும்படியான எவ்வித நடப்பும் வசதியும் சலுகையும் இருக்கக் கூடாது என்பதும் தானே?

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

## 7-ம் நாள்.

★

சென்னை ஆக 18.

இன்று காலை 9-15-மணிக்கு ஊர்வலம் தொடங்கி 10-30 வரை மறியல் நடந்தது.

சர்வாதிகாரி, பெரியார் ஆகியோரின் அறிக்கையை யொட்டி மாணவத் தோழர்கள் ஒழுங்காகவும், அமைதியாகவும் இன்று நடந்து கொண்டது குறிப்பிடத் தக்கது.

வியாழனும், வெள்ளியும் பார்ப்னர்களின் பூணூலை மாற்றிக் கொள்வதற்காகப் பள்ளிக் கூடங்களுக்கு விடுமுறை. சனி, ஞாயிறு வழக்கம்போல விடுமுறை. 23—8—48-ல் 8-ம் நாள் மறியல் துவங்கும்.

ரோஜா முத்தையா

# ஹிஸ் ஹைனஸ் சர். கிருஷ்ண குமார ஸின்ஜி பவஸின்ஜி கெ. ஸி. எஸ். அய். அவர்கள்,

சென்னை கவர்னர் ஆகப் பதவி யேற்றபோது சென்னை மந்திரி சபையார்(!) தீந்தமிழில் செப்பிய

## ( வரவேற்பிதழ். )

ராஜாதி ராஜ ராஜகுல கெம்பீர ராஜ மார்த்தாண்ட கர்னல் அவர்களே! கர்னல் மேன்மை தங்கிய கனமவர்களே! கனம் சர். கிருஷ்ண குமார ஸின்ஜி பவஸின்ஜி கெ. ஸி. எஸ். அய். அவர்களே வருக! வருக!!

நாடாண்ட எமது இனம் நாடோடிக் கூட்டத்தின் சேர்க்கையால் நலிவுற்று, நைந்த உள்ளத்தினராகி, தனக்குரிய எண்ணத்தையும் செயலையும் கைவிட்டு, பிறர் செயலுக்கு ஆட்பட்டு, பிறர் சொல்லுக்குத் தலைதாழ்ந்து நடக்கும் பெற்றி ஒழியவில்லை என்று பேசிடும் பேதையர் மமதையை யடக்கும் பெம்மானே வருக! வருக!!

சுதந்தரம் பெற்றோம் என்று கூவி நாங்கள் காடிக்கத்துக் கத்தினாலும், பெற்ற சுதந்தரம் தென்னாட்டவருக்கல்ல; வடநாட்டு பனியாப் பார்ப்பனக் கூட்டாட்சிக்கே என்று முழங்கும் சிலரின் முழக்கத்துக்கு முத்தாய்ப்பு வைக்கவந்த பவநகர் ஈன்ற பார்த்திப குல திலகமே வருக! வருக!!

ஆண்பெண் என்பது கூட இரண்டு ஜாதியல்ல, பண்பால், செயலால் இரு வேறுபட்டவர்கள் உண்டு என்பதை வேண்டுமானால் நாம் ஒப்புக்கொள்ளுவோம் என்று கூறி, ஜாதியே இல்லாது வாழ்ந்த எமது நாட்டில், சண்டாளப் பார்ப்பனீயம் ஜாதியைப் புகுத்த, அதனால் நாலு ஜாதி இன்று நாலாயிரம் ஜாதியாய்ப் பிளவு பட்டுக்கிடக்க, அப்பிளவுகளை யெல்லாம் ஒழித்து மனிதன் மனிதனாகவே வாழ வேண்டும், மனிதன் என்கிற ஒரு ஜாதிதான் உண்டு என்று, எமது இனத்தில் ஒரு பகுதியார் இன்று பேசுகிறார்களே, அவர்கள் கொட்டம் அடங்க, வர்ணாச்சிரமம் தழைத்தோங்க, எம்மை ஆளவரும் க்ஷத்திரிய குல சிம்மமே வருக! வருக!!

சௌராஷ்டிர யூனியன் இணைப்புக்குத்தங்கள் சமஸ்தானத்தை உட்படுத்தியபோது, தங்களுக்கு "ராஜ பிரமுக்" என்ற கௌரவத்தை யளிக்காமல் உதவி ராஜ பிரமுகர் என்ற நிலையை யளித்த சர்தார்ஜி அவர்கள், தங்கள் மனக் குறையைப் போக்கவேண்டுமென்ற முறையில் எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கையாக இது இருந்தாலும் கூட, ராஜ வம்சத்தை அழியாமல் கண்ணியத்துடன் ரட்சிக்கும் ஸ்தாபனம் காங்கரஸ் என்பதை இது உலகுக்கு உணர்த்துவதால் நாங்கள் களிபேருவகை யடைகிறோம். மேலும் வெள்ளையன் அளித்த பட்டங்கள் இனி விலை மதிக்கப்படமாட்டாது என்று பேசியிருந்தாலும், தங்களைச் 'சர்' என்றே எமது ஆண்டை வர்க்கம் அழைப்பதிலிருந்தும், எங்களுக்கும் அவ்வாறே அறிமுகப்படுத்தியதிலிருந்தும் தங்கள் ராஜ குல கீர்த்தியை, பெருமையை காங்கரஸ் கட்டாயம் வலிந்து வலிந்து காப்பாற்றும் என்பதற்கு ஏதேனும் அய்யமுண்டோ?

தங்களின் வருகையைப் பெற்ற எமது மாகாணத்தில், பாழடைந்த நாடகமேடைகள் எல்லாம் புத்துயிர் பெற்று, பரந்த புராணங்கள் எல்லாம் புது மெருகு பெற்று, ஈடும் எடுப்பும் அற்றமுறையில் ராஜ பார்ட்டுகள் ஜொலிக்க, அதற்கேற்ப நாடகத்தின் பிற உறுப்புகளும் சோபிக்கப்போவது உறுதி! உறுதி!! முக்காலும் உறுதி!!!

இமாலய யாத்திரையெல்லாம் சென்று அவற்றை இனிது நிறைவேற்றிய இந்து மத ரட்சகரே! இந்து மதம் வேரூன்ற முடியாது தத்தளிக்கும் எங்கள் மாகாணத்தில், தங்கள் வருகையின் பின், தங்கள் ஆளுகையால், இந்து மதத்திற்கு ஒரு பெரும் செல்வாக்கு, ஆழ்வார்கள் நாயன்மார்கள் எல்லாம் உண்டாக்கிய செல்வாக்குக்கு அதிகமாகவே உண்டாக்கிவிட முடியும் என்று எமது நாட்டு அந்தணாளர்களும் மடாதிபதிகளும் கனவு கண்டுகொண்டிருக்கிறார்கள். அக்கனவை நனவாக்க வேண்டியது உங்கள் பொறுப்பு என்பதை மிகத் தாழ்மையுடன் விண்ணப்பித்துக்கொள்கிறோம்.

எதற்கெடுத்தாலும் மூவேந்தர் ஆண்டநாடு என்று பழம்பெருமை பேசும் சில பழமை விரும்பிகள் எங்களிடையே சிலர் உண்டு. அவர்கள் எல்லாம் பரம்பரை வேந்தராகிய தங்கள் நியமனத்தால் தங்களை வாழ்த்தி இப்பேருதவி செய்தகாங்கரசையும் வாழ்த்துவார்கள் என்பது சத்தியம். இன்னும் தங்களுடைய ஆட்சியால் ஏற்படப்போகும் நன்மைகள் எவ்வளவோ உண்டு. சுருக்கமாக பழைய மனுதர்மமே அதாவது இராமராஜ்ஜியமே புது மலர்ச்சி யடையும் என்பது முக்காலும் திண்ணம்.

பீடு நிறைந்த பேசும் பொற்சித்திரமே! மன்னாதி மன்னர்களை யெல்லாம் நாங்கள் 'இஸ்பேடு' என்றும் 'ஆடுதன்' என்றும் பழித்திருந்தாலும், தங்கள் மனம் கோணாமல் தங்களுக்கு அடங்கி நடந்து தங்கள் கட்டளையை நாங்கள் சிரமேற்கொள்ளுவோம். எங்கள் பிழை பொறுத்து எங்களை ஏவி ஆட்கொள்ளும்படி பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

7—9—48
சென்னை.

இங்ஙனம்,
**சென்னை மந்திரி சபையார்!**

குறிப்பு:— சென்னை மந்திரிசபை பவநகர் ராஜாவை கவர்னராக் வரவேற்றிருப்பதிலிருந்து இத்தகைய ஒரு வரவேற்பிதழை அளிக்குமானால் நாம் ஆச்சரியப்படமாட்டோம்.

[ஆ—ர்]

## திராவிடர் கழக நிர்வாகக் கமிட்டி.

★

நாளது 22-தேதி ஞாயிறு பகல் 10-மணிக்கு சென்னையில் கமிட்டிக் கூட்டம் நடைபெறும்.

இந்தி எதிர்ப்பு சம்பந்தமாக நடைபெறும் விஷயங்கள், நடைபெறவேண்டிய விஷயங்கள் யோசிக்கப்படும். இக்கூட்டத்திற்கு கமிட்டி அங்கத்தினர்களோடு, ஜில்லா இந்தி எதிர்ப்புக் கமிட்டித் தலைவர் அல்லது செயலாளரும் அவசியம் வரவேண்டுமெனப் பெரியாரால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# குடி அரசு

21—8—48 சனிக்கிழமை.

## மனு (அ) நீதிக்கு மந்திரிகள் உடந்தை!

★

நமது சென்னை மாகாண மந்திரி சபையார் பார்ப்பனீய ஆதிக்கத்தின் முழு அடிமைகள், பார்ப்பனர்கள் கீறிய கோட்டைத் தாண்டமாட்டார்கள், பார்ப்பனர்களின் நலத்திற்கு ஆக எவ்வளவு பாதகமான செயலையும் செய்யப் பின் வாங்க மாட்டார்கள், ஏழையைப் பற்றியும் ஏழ்மையைப் பற்றியும் அவர்கள் பேசுவதெல்லாம் வெறும் பொழுதுபோக்கு, சுருக்கமாக எந்த விஷயத்திலும் பார்ப்பனர்களுக்கு ஒரு நீதி மற்ற சூத்திரர்களுக்கு ஒரு நீதி என்கிற மனு தர்மத்தை அணுவளவும் பிசகாமல் கையாளத் தயங்கமாட்டார்கள் என்பதற்கு இதோ மறுக்க முடியாத ஒரு ருசு!

47-ம் வருஷம் ஏப்ரல் மாதம் அதாவது 16 மாதங்களுக்குமுன்பு இப்போதைய ரெட்டியார் மந்திரி சபை ஏற்பட்டவுடன், ரெவின்யூ மந்திரி தோழர் காளாவெங்கிட்டராவ் அவர்கள் ஜமீன் இனாம் ஒழிப்பு மசோதா கொண்டு வந்தார். இந்த மசோதாவிற்கு ஒரு அடிப்படை, ஆச்சாரியார் ஆட்சிக் காலத்தில் ஜமீந்தார்களை மிரட்ட வேண்டும் என்கிற ஒரே காரணத்திற்காக தோழர் பிரகாசம் அவர்கள் ஜமீன் ஒழிப்பு மசோதா என்று ஒரு மசோதா கொண்டு வருவதற்கு அதிகாரம் பெற்று, அதற்கான திட்டத்திற்கு ஏற்பாடு செய்து, பிறகு கைவிட்டு ஓடிவிட்டது ஆகும். மற்றொரு அடிப்படை ஜமீன்களை ஒழிப்பதற்கு என்ன நியாயமோ, என்னகாரணமோ அதைக் காட்டிலும் இந்த நாட்டிலுள்ள இனாம்களை ஒழிப்பதற்கு நியாயமும் அதற்கான காரணங்களும் ஏராளமாகவுண்டு என்று நாம் பல ஆண்டுகளாக சுமார் 20 வருஷங்களாகப் பிரசாரம் செய்து வருகின்றோம் என்றாலும், 1933-ம் வருஷமுதல் ஈரோட்டுச் சமதர்மத் திட்டம் என்கிற பெயரால் ஜமீன் ஒழிப்பு, லேவாதேவி ஒழிப்பு, மிராசுதார் ஒழிப்பு, கடவுள்கள் சுரண்டல் ஒழிப்புக்கு ஆன காரியங்களைத் தீவிரமாகப் பிரசாரம்செய்தும், மாநாடு நடத்தியும் பொதுமக்கள் கருத்தை அனுகூலமாக உருவாக்கி வைத்திருந்தது. இதனால் தான் காளா அவர்கள் ஜமீன் ஒழிப்போடு இனாம் ஒழிப்பையும் சேர்த்து இரண்டுக்கும் ஆக மசோதா கொண்டுவர வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

இதை நாம் எதற்காகக் கூறுகிறோம் என்றால், காங்கரசின் திட்டம் என்றைக்குமே இந்த நாட்டு மக்களுக்கு சமதர்மத்தையும் சமவுரிமையையும் ஏற்படுத்த வேண்டுமென்பது அல்லவே அல்ல என்பதும், பணக்காரன் பணக்காரனாகவே இருக்கவேண்டும், பார்ப்பான் பார்ப்பானாகவே இருக்க வேண்டும், தொழிலாளி தொழிலாளியாகவே இருக்கவேண்டும், பறையன் பறையனாகவே இருக்கவேண்டும் ஆனால் எல்லோரும் அந்தந்த நிலையில் சௌகரியமாக இருக்க வேண்டும் என்பதாகத்தான் அவர்கள் பேசியும் செய்தும் வருகிறார்கள். இதனால் ஏற்படும் பலன், பிரிவும் பிளவும் உறுதிப்படுத்தப் படுகிறதே ஒழிய, எல்லோரும் சௌகரியமாக இருப்பது என்பது, எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்பது வெறும் கேலிக்கூத்தாகவே முடிந்து வந்திருக்கிறது என்பதும் எவ்வளவு உண்மையானது என்பதை எடுத்துக் காட்டுவதற்காகவே யாகும்.

சென்ற வருஷம் ஏப்ரல் மாதம் கொண்டுவந்த இந்த மசோதா, பார்ப்பனர்களின் பேரெதிர்ப்பினாலும், வடநாட்டு மேலிடத்திற்குக் காவடி தூக்குவோம் என்ற பயமுறுத்தலினாலும் சட்டசபையில் நிறைவேற்றப்பட முடியாமல் போய், 6-மாதங்களுக்குப் பிறகு அதாவது அக்டோபர் மாதத்தில் காங்கரஸ் கட்சிக் கூட்டத்தில் இந்த மசோதாவை விவாதித்தார்கள். அந்தக் கட்சிக் கூட்டத்தில் ஜமீன்களோடு இனாம்களையும் சேர்த்து ஒழிக்க வேண்டியதுதான் என்று பெரும்பான்மையான கட்சி மெம்பர்கள் முடிவு கட்டினார்கள். பார்ப்பனர்களின் தயவால் தான் பிழைக்க முடியும் என்று நம்பிக்கொண்டிருக்கும் மந்திரிகள் எல்லாம், இந்தக் கட்சிக் கூட்டத்தில் பார்ப்பனர்களிடம் மன்னிப்புக் கேட்டுக் கன்னத்தில் போட்டுக்கொண்டு, ஜமீன் ஒழிப்போடு இனாம் ஒழிப்பையும் சேர்க்கக்கூடாது என்பதற்கே ஓட்டுக் கொடுத்தார்கள். 10-மந்திரிகள் மசோதாவை எதிர்த்து பார்ப்பனர்களுக்குச் சாதகமாக ஓட்டுக் கொடுத்திருந்துங் கூட, இனாமும் ஜமீனோடு ஒழிய வேண்டியதுதான் என்கிற தீர்மானம் அந்தக் கட்சிக் கூட்டத்தில் மெஜாரிட்டியான வாக்குகளால் நிறைவேறியது. இந்த மெஜாரிட்டியின் முடிவை நாங்கள் ஒப்புக்கொள்ளமாட்டோம், இது காங்கரசின் லட்சியமல்ல, காங்கரசின் லட்சியம் எங்களுக்குத் தெரியாதா என்ன? என்றுதான் அப்போது தோழர்களான பாஷ்யமும் வரதாச்சாரியும் வெளிப்படையாகவே பயமுறுத்தினார்கள். வரதாச்சாரி அவர்கள் சட்டசபைப் பதவியை ராஜினாமாவே செய்து விட்டார். எட்டையாபுரத்திற்கு வந்த சி. ஆர். "நானிருக்க பயமேன்",

என்று கூறி, வரதாச்சாரி கண்ணீரைத் துடைத்து ராஜினாமாவை கருவிலேயே அழித்துவிட்டார். ஜமீன் இனாம் ஒழிப்பு மசோதாவோ அனாதைக் குழந்தையாக சீண்டுவாரற்றுக் கிடந்து இப்போது மசோதாவிலிருந்து இனாம்களை நீக்கிவிட்டு ஜமீன்களை மட்டும் ஒழிக்கப்போகிறேன் என்கிறது.

அறிவும் சிந்தனைத் திறமுமுடைய காங்கரஸ் திராவிடத் தோழர்கள் இப்பொழுது என்ன செய்யப்போகிறார்கள்? ஜமீனோடு இனாமும் சேர்த்து ஒழிக்கப்படவேண்டியது தான் என்று, அன்று மெஜாரிட்டியான காங்கரஸ் மெம்பர்கள் முடிவுகட்டினார்களே அந்தச் சூராதி சூரர்கள் இப்பொழுது என்ன செய்வார்கள்? சூரர்களுடைய முடிவைக் கேட்டுத் துள்ளிக் குதித்த தினசரி வகையறா, துட்டுக்காக பித்தலாட்ட வேலை செய்கிறது வரதாச்சாரி வர்க்கம் என்று துணிந்தெழுதிய தினசரி வகையறா இப்பொழுது என்ன செய்யப்போகிறது? இக்கேள்விகளை மானத்திற்குக் கட்டுப்பட்ட, உண்மைக்கு மதிப்பு வைக்கும் காங்கரஸ்காரர்கள் யாராவது இருந்தால் நிச்சயமாகக் கேட்பார்கள், கேட்டேயாக வேண்டும் என்பது உறுதி.

தோழர் காளா அவர்கள் இனாம்களையும் ஜமீனோடு சேர்த்து ஒழிக்கப்படவேண்டியது தான் என்று தீவிரமாகப் பேசிய அந்தக்காலத்தில், மெஜாரிட்டியான காங்கரஸ் கட்சி அங்கத்தினர்கள் அதை ஆதரித்து நிச்சயமாக ஒழித்தேஆகவேண்டுமென்று முழக்கிய அந்த நேரத்தில், இது இந்த மந்திரிசபையால் முடியக்கூடிய காரியமல்ல என்பதை நாம் அப்போதே வற்புறுத்திக் கூறியிருக்கிறோம். சென்ற வருஷம் நவம்பர் மாதம் 1-தேதி தலையங்கத்தில் ஜமீன் இனாம் மடம் ஒழிப்பு என்று தலைப்பிட்டுப் பின் வருமாறு குறிப்பிட்டிருந்ததை இங்கு ஞாபகப்படுத்துகிறோம்.

“சென்னை அரசாங்கம் ஜமீன் ஒழிப்பு வேலை என்று துவக்கி, இனாம் ஒழிப்புக்குச் சென்று, மட ஒழிப்புக்குக் கவனத்தைத் திருப்பி, டில்லி புண்ணிய ஸ்தலத்திற்குக் காவடி எடுத்து யாத்திரை செய்துவிட்டு இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது.

இந்த முயற்சியின் முடிவு என்பதாக ஏதாவது இருக்குமானால், அது, திராவிடர்களைப் பழிவாங்கி ஆரியர்களுக்குக் கேள்வி கேட்பாடு அற்ற ஏகபோக உரிமையைக் கொடுத்து, “மநு” தர்ம ஆட்சி நிலைக்கு நம் மக்களைக்கொண்டு போய் வைப்பதாகவே, இருக்குமேயல்லாமல் மற்று எதுவாகவும் இருக்காது என்கிற விஷயத்தில் எந்தத் திராவிடருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை என்று கூறலாம்”

இவ்வாறு பத்துமாதங்களுக்கு முன்னால் நாம் குறிப்பிட்டிருந்தபடியே ஜமீன் இனாம் ஒழிப்பு மசோதாவின் முடிவு இப்பொழுது ஆகியிருக்கிறது.

பார்ப்பனர்களின் தூண்டுதலால், ஆச்சாரியாரின் 'ஆதரவுக்கு மேல் காங்கரஸ் மேலிடம் இப்படிக் கட்டளை யிட்டுவிட்டது, இக்காரியத்தில் நாங்கள் என்ன செய்ய முடியும்? மேலிடம் எப்படிக் கட்டளையிடுகிறதோ அக்கட்டளையைத் தலைமேல் ஏற்று நடத்தும் அடிமைகள்தானே நாங்கள்,என்று வெளிப்படையாக ஒப்புக்கொள்கிறார்கள் நமது சென்னை மந்திரி சபையார். முக்கியமாகப் பிரதம மந்திரி அப்படிச் சொல்லுகிறார்.

காங்கிரஸ் மேலிடத்திற்கும் சென்னை காங்கரஸ் கட்சியாருக்கு மிடையே, பேரத்திலிருந்து கொண்டிருந்த இந்தப் பிரச்னை, “மேலிடம் பண நஷ்டம் உண்டாக்காத வகையில் எந்த யோசனையைச் சொன்னாலும் நாங்கள் ஏற்றுக்கொள்ளத்தயார்” என்று காங்கரஸ் கட்சியின் சார்பில் சென்னை மந்திரி சபை முழுச்சரணாகதியடைந்தபின், காங்கரஸ் மேலிடம் மூன்று யோசனைகளைச் சொல்லி இவற்றில் ஏதாவதொன்றை எடுத்துக் கொள்ளும்படி சொல்லிவிட்டது. மேலிடம் கூறிய மேலான யோசனைகள் இவை.

1. திராவிட ஜமீந்தார்களை மட்டும் ஒழிக்க வேண்டும். பார்ப்பன ஜமீந்தார்களான இனாம்களை முழு சுயேச்சையுடன் வளரவிட்டு விடவேண்டும்.

2. பார்ப்பன இனாம்களையும் ஒழிப்பதாயிருந்தால், முழு நஷ்ட ஈடு அதாவது திராவிட ஜமீந்தார்களுக்குக் கொடுப்பதைக் காட்டிலும் அதிகமான நஷ்ட ஈடு பார்ப்பனர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

3. பார்ப்பன இனாம்களை இரண்டு பங்காக்கி, ஒரு பங்கை உழவர்களுக்கு உரிமையாக்கி மற்றொரு பங்கைப் பார்ப்பனர்களுக்கே உரிமையாக்கிவிடவேண்டும்.

இந்த யோசனைகள் மூன்றுமே பார்ப்பனர்களுக்குத் தீங்கு வரக்கூடாது, காங்கரஸ் ஆட்சியினால் பார்ப்பனர்கள் மனம் கோணக்கூடாதுஎன்ற கருத்தின்மீது கூறியவைகளே என்பதை நாம் எடுத்து காட்ட வேண்டிய அவசிய மில்லை.

இந்த மூன்றில், திராவிட ஜமீந்தார்களை ஒழிப்பதோடு நின்று கொள்கிறோம். அதுவும் நஷ்டஈடு கொடுக்க வேண்டும் என்ற புத்தியை ஏற்றுக் கொள்ளுகிறோம். பார்ப்பன ஜமீந்தார்களான இனாம்தார்களை விட்டுவிடுகிறோம். மறந்தும் கூட இனி அவர்கள் வழிக்குப் போகமாட்டோம் புத்தி! புத்தி!! என்று ஓமந்தூரார் தலைமையில் 11 பேர் கொண்ட ஒரு கமிட்டி--இனாம்களையும் சேர்க்க வேண்டு மென்ற மெஜாரிட்டிக்கு அன்று தலைமையாயிருந்த காமராஜரையும் உள்ளிட்ட ஒரு கமிட்டி, மேலிடத்தின் யோசனைகளில் முதல் யோசனையை வெற்றிகரமாக எடுத்துக் கொண்டுவிட்டது.

ஜமீன்தாரர்களுக்கு வக்காலத்து வாங்கவேண்டும் என்பதோ, ஜமீன்தார்களின் ஆடம்பர ஆர்ப்பாட்ட நிலைமை பாதுகாக்கப்படவேண்டு மென்பதோ நம் விருப்பமல்ல. ஆனால் ஜமீன் ஒழிப்புக்கு என்ன காரணம்? என்ன நியாயம்? நமது காங்கரஸ் தோழர்களால் கூற முடியும் என்று கேட்கிறோம்.

சமுதாய நலனைப் பேணாத ஒரு மனிதன்—பொதுப் பயன் எதுவுமற்ற தன்மையில் இவ்வளவு பணம் ஏன் திரட்டவேண்டும்? அதுவும் உடலுழைப்பு இல்லாமல்—உழைத்தவர்கள் எல்லாம் பசியால் வாட, கடனில் மூழ்க, உழைத்துழைத்து உருக்குலைய, மேனி வாடாமல், மேனி மெருகு குலையாமல், மற்றவர்கள் உழைத்த உழைப்பின் பயனை சுரண்டாமல் சுரண்டி, ஏன் ஒருவன் பட்டு மெத்தையில் கிடந்து புரளவேண்டும்? உழைத்தே யறியாத அந்தத்தசைப்பிண்டத்திற்கு உயர்ந்தவன் என்கின்ற அனாவசியமான பெருமை ஏன்? இந்தக் கேள்விகள்தானே உண்மையான ஜமீன் ஒழிப்புக்குக் காரணமாக இருக்கமுடியும்?

ஜமீன் ஒழிப்புக்கு இதுதான் காரணமென்றால் இனாம் களை விலக்கியதற்கு நாணயமும் யோக்

இயதையுமுள்ள ஒரு காங்கரஸ் வாலா என்ன சமாதானம் சொல்ல முடியும் என்று கேட்கிறோம்.

மேலும் ஜமீன்தார்களைப்போலவே பிறர் உழைப்பை வஞ்சித்து, அவர்களைப்போலவே சுக வாழ்வு வாழ்ந்து, அவர்களைப்போலவே மற்றவர்களைக் கொடுமைப் படுத்தி, பொதுப்பயன் எதுவுமற்ற தன்மையில் வாழ்ந்து கொண்டிருக்கும் நம் மாகாண வடபாதி மங்கலங்கள், அழகப்பாக்கள், சண்முகங்கள், அல்லாடிகள், பழைய கோட்டைகளை எல்லாம் ஏன் விட்டு வைக்கவேண்டும்? என்பதற்கு என்ன நியாயமான சமாதானம் சொல்லமுடியும் என்று கேட்கிறோம்.

ஜமீன்தார்களை யொழிக்கவேண்டும். ஆனால் அந்த ஜமீன்தார்களுடைய மன இன்பத்திற்கும் உடல் இன்பத்திற்கும் வழிகாட்டியாய், துணையாய் இருந்த பார்ப்பனர்களுக்கு, அந்த ஜமீன்தார்கள் கொடுத்த இனாம்களை யெல்லாம் விட்டு விடவேண்டும். ஒருவனைக் கொலை செய்ததற்கு ஒருவனுக்குத் தண்டனை. அவன் கொலை செய்ததற்கு உடந்தையாக, கொலை செய்யப்பட்டவன் கையையும் காலையும் பிடித்துக் கொண்டு ஆதரவாக நின்று, அவன் இறந்த பிறகு அவனுடைமையைப் பங்கிட்டுக்கொண்டு வாழ்பவர்களுக்குத் தண்டனை இல்லை. இந்த நியாயம் நியாய மாகுமா? இது தானே மநுநீதி என்பது? என்றுதான் நாம் கேட்கிறோம்.

எங்களுக்கென்று ஒருசுய புத்தி இல்லை. நாங்களாக இதுதான் நியாயம் என்று சொல்ல எங்களுக்குத் தகுதியில்லை. எங்கள் மேலிடம் எப்படிக் கட்டளையிடுகிறதோ அப்படித்தான் நாங்கள் நடந்து கொள்ள முடியும் என்று மநு (அ) நீதிக்கு மந்திரிகள் உடந்தையாயிருக்கிறார்களே இது நியாயமா? இது முறையா? என்று தான் நாம் மக்களைக் கேட்கிறோம்.

★

## ஆர். கே. எஸ்! ராஜினாமா.

தோழர் ஆர். கே. சண்முகம் அவர்கள் இந்த மாதம் 15-தேதி இந்திய யூனியன் நிதி மந்திரிப் பதவியை ராஜினாமாச் செய்துவிட்டார். ஆச்சாரியார் ராஜினாமாவை ஒப்புக்கொண்ட பின் 17-தேதி மத்திய சட்டசபையில் தன் ராஜினாமாவை விளக்கி நேருவின் ஆலோசனைக்கிணங்க அவர் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார். தற்காலீகமாக நிதி இலாகாவை தோழர் நியோகி மேற்பார்ப்பாராம்.

# செய்தியும்—சிந்தனையும்.

★

● ஒரு மெம்பர்:— மசோதா ஒரு ஹிட்லர் சட்டமாகுமென்று கூறினார். சர்க்கார்:— ஹிட்லர் ஒருபோதும் ஒரு சட்டத்தையும் கொண்டு வருவதே கிடையாது.

சென்னை சட்டசபையில்.

ஹிட்லருக்கும் இந்த சர்க்காருக்கும் ஒரே ஒரு வகையில் தான் வித்தியாசம்; ஹிட்லர் எதற்கும் சட்டம் கொண்டு வர மாட்டார், சென்னை சர்க்கார் சட்டம் கொண்டு வருகின்றனர். இவ்வளவு தான் வித்தியாசம் என்று சர்க்காரே உண்மையை ஒப்புக் கொள்ளும் போது இதனுடைய அழிவைப் பற்றி யாரேனும் பேசவேண்டுமா?

● விரைவில் வளரும் மரங்களை உற்பத்தி செய்ய வேண்டுமென இந்திய சர்க்கார் உணவு மந்திரி விடுத்திருக்கும் வேண்டுகோளுக்கிணங்கி ஆகஸ்ட்டு 15ல் யன்று மரங்கள் உற்பத்தி வாரம் ஆரம்பிக்கவேண்டுமென சென்னை சர்க்கார் அறிவித்திருக்கின்றனர்.

செய்தி.

ஆகஸ்ட்டு பதினைந்தால் இந்நாட்டு மக்கள் எந்த விதமான புதிய பலனையும் பெறாவிட்டாலும், இந்த நாட்டு மரங்களுக்காவது ஒரு நன்மையைச் செய்ய முற்பட்டிருப்பதைக் கண்டு, அந்த மரங்கள் எல்லாம் விரைவில் வளர்ந்து, நட்டு வளர்க்கப் பேருதவியாய் நின்ற மந்திரிகளை எல்லாம் விரும்பி வரவேற்றுத் தம் நிழலை கொடுத்து ஆதரிக்கும் என நம்புகிறோம்.

● நான் படித்த காலத்தில் என் உபாத்தியாயர் காலில் அன்றாடம் விழுந்து நமஸ்கரிப்பேன்.

இந்தி மந்திரி அவினாசியார்.

அவினாசியார் பொய்ப்புளுகு புளுகுவதை அவசியம் என்று ஏன் கருதுகிறார்? இவர் படித்தது அப்படி ஒன்றும் ஹைதர் காலமில்லையே! அன்றாடம் என்பது உண்மையானால் எந்த நாளும் விடுமுறை என்பதே இல்லையா? என் உபாத்தியாயர் என்று ஒருவரைக்குறிப்பிடுவது உண்மையானால், இவர் படித்த வகுப்புக்கு அந்த ஒரு வாத்தியாரைத் தவிர மற்று எவரும் போவதில்லையா? இந்த நிகழ்ச்சி உண்மையாய் இருக்குமென்றால், அவினாசியார் படித்துப் பட்டம் பெறவில்லையென்பதும், உபாத்தியாயர் காலில் விழுந்து கும்பிட்டதினால்தான் பட்டம் பெற்றார் என்பதும் உண்மையாகுமல்லவா?

● பள்ளிக்கூடங்களில் இப்பொழுது மாணவர்களாயிருந்து, வருங்காலத்தில் தேசத்தை ஆட்சி புரிபவர்களுக்குப் போதிய பயிற்சி அளிப்பதற்காகவே இந்தி போதிக்கப்படுகிறது.

ஸ்ரீ பக்தவத்சலம்.

பயிற்சி அளிப்பது உண்மையாயிருக்கலாம். ஆனால் அந்தப் பயிற்சி நாட்டை ஆளுவதற்கா? நாட்டில் அடிமையாய் அடங்கி ஒடுங்கி வாழ்வதற்கா?

● தேசீய கீதத்திலிருந்து 'சிந்து' என்ற பதத்தை எடுத்து விட்டு அதற்குப் பதிலாக 'ஆந்திரா' என்ற பதத்தை சேர்க்க வேண்டும். ஏனெனில் இப்போது 'சிந்து' இந்திய யூனியனில் ஒரு பாகமாக இல்லை.

சுப்பா சாஸ்திரியார்.

பர்மாபிரிந்த பிறகும், பாகிஸ்தான் ஏற்பட்ட பிறகும் இந்த நாட்டைப் பாரத தேசம் என்று சொல்லி பாரத மாதாவைச் சித்திரித்துக் காட்டும், மூளைக்கு வேலை தராத முத்தண்ணாக்கள் இதைப்பற்றி எண்ணவா போகிறார்கள்? எண்ணினால் பாரத மாதாவை இனி எப்படிச் சித்திரிப்பார்கள்?

● தென் இந்தியாவை வட இந்தியாவிலிருந்து பிரிக்க வேண்டுமென்று ஓர் கிளர்ச்சி இப்பொழுது இங்கே நம்மிடையே ஆரம்பமாகியிருக்கிறது.

காமராஜர்.

பிரிந்தேயிருக்கின்ற உண்மையை உணர்ந்த உணர்ச்சியே இப்பிரிவினைக்கு அடிப்படை என்பதையும், இப்பிரிவினை யுணர்வு தோன்றி வலுப்பெற்றது 10-ஆண்டுகளுக்கு முன்னாலேயே என்பதையும், கண்ணும் காதும் இருக்கிற காரணத்தால் அறிந்துகொண்டிருக்கிற காமராஜர் இப்போது இங்கே என்று குறிப்பிடுகின்றார் என்றால் உண்மை என்ன? காங்கரஸ் வட்டாரத்திலேயே இப்பொழுது பலர் பிரிவினைக் கிளர்ச்சியை ஆதரிக்கிறார்கள் என்பது தானே இதன் உண்மை?

● ஆயிரம் வருஷங்களுக்குப் பிறகு, இந்தியாவின் சரித்திரத்திலேயே

முதல் முதலாக, இந்தியாவின் பூப் பிரதேசத்தில் மிகப்பெரும் பகுதியை ஒன்று திரட்டும் வேலையை நாம் சாதித்திருக்கிறோம்.

சர்தார் பட்டேல்.

பெரும் பகுதியைத் திரட்டுவது ஆயிரம் வருஷங்களுக்குப் பின் இப்போது தான் என்பது உண்மையானாலும், அந்தப் பெரும் பகுதியில் முன்பு திராவிடம் சேர்ந்ததில்லை என்பது எவ்வளவு நிச்சயமோ, அவ்வளவு நிச்சயமாகவே இப்போது திரட்டப்பட்ட பகுதிகளும் விரைவில் வெவ்வேறாகி விடும் என்பதும், சர்தாரின் இந்த மகிழ்ச்சி, மணல் வீடுகட்டி மகிழும் மழலைகளின் மகிழ்ச்சியைப் போன்றது என்பதும் சரித்திரமல்லவா காட்டவேண்டும்.

★

(6ம் பக்கத் தொடர்ச்சி)

சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டு, பிற்படுத்தப்பட்டு இருக்கும் திராவிட மக்களுக்கு தனிச்சலுகை கொடுத்து கூடியவரையில் சம சமுதாயமாக்கப் படவேண்டு மென்பதும் தானே?

சமயத் துறையில் புராணக் கடவுள்கள் பிரசாரமும், விக்கிரகாராதனையும் அனுமதிக்கக்கூடாது என்பதோடு,

கோவில், மடம், வர்ணமுறை தர்மம் என்பவைகள் பேரால் பணம் இருப்பு இருப்பதோ, சேர்ப்பதோ, செலவு செய்வதோ கூடாது என்பதும்,

தர்மம் என்பதெல்லாம் மக்கள் வாழ்வில் உயர்வு தாழ்வும், வாழ்க்கைத் தேவையில்பெருமித உயர்வு தாழ்வும் இல்லாமல் நித்திய ஜீவனத்தைப் பொறுத்தவரையிலாவது அடிமை உணர்ச்சி தேவையில்லாத ஆண்மை வாழ்வு வாழ வகைசெய்யவேண்டு மென்பதும்தானே ஒழிய மற்றப்படி எந்தத் துறையில் என்ன கெடுதி ஏற்பட நான் ஆசைப்படுகிறேன்?

கல்வியில் தானாகட்டும். 100-க்கு 90 திராவிட மக்கள் கைநாட்டு தற்குறிகளாய் இருக்க, இதைச் சரிப்படுத்தாமல் (ஹைஸ்கூல், உயர்தரப் பள்ளியும் காலேஜ், கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும், என்னும் பேரால்) பாட்டாளி மக்களின் உழைப்பை வரியாக வாங்கி கோடிக் கணக்கான ரூபாய்களை செலவு செய்யக்கூடாது என்பதைத் தவிர கல்விக்கு நான் எந்த விதத்தில் என்ன கெடுதி செய்கிறேன்?

நமக்கு அரசியலுக்கோ, சமய சமுதாய இயலுக்கோ, வேறுகலை இயலுக்கோ ஆள்கள் வேண்டுமானால் வேண்டிய அளவுக்கு கிராண்டு ஸ்காலர்ஷிப், ஸ்டைபெண்டு கொடுத்து எங்காவது சென்று படித்து வரும்படி செய்து வேலைவாங்கலாம் என்றும், ஏராளமான பிரபுக்கள் இருக்கிற நாட்டில் பிரபுக்களுக்கு மாத்திரம் கிடைக்கும்படி கலைகளுக்கு, உயர்ந்த கல்விக்கு ஏழைகள் பணம் ஏன் செலவு செய்யவேண்டும்?

என்பவை போன்ற கருத்தன்னியில் மற்றப்படி நான் எந்த விதத்தில் நாட்டுக்கு, சமுதாயத்துக்கு கேடு விளைவிப்பவனாக இருக்கிறேன்? அன்றியும் என்னிடத்தில் எங்காவது எப்போதாவது பலாத்காரத்தைத் தூண்டும் சொல்லையோ செய்கையோ ஜாடையையோ கண்டீர்களா?

அல்லது என் பேச்சால் எழுத்தால், செய்கையால் எங்காவது என்றாவது பலாத்காரம் கலகம் குழப்பம் ஏற்பட்டதா?

சர்க்காரைக் கவிழ்க்கும் ஜாடையைக் கண்டீர்களா? குழப்பம் கலவரம் உண்டாகும் ஜாடையையோ அனுபவத்தையோ கண்டீர்களா?

ஆதலால் ஹிந்தி போராட்டத்தை ஒடுக்குவது என்கின்ற சாக்கைவைத்துக்கொண்டு என் முயற்சியை, என் தொண்டை நீங்கள் அழித்து விடுவது என்று முடிவு செய்து கொண்டீர்களானால் அதை உங்கள் இஷ்டத்துக்கே விட்டு விடுகிறேன்.

எனது தொண்டுக்கும் முயற்சிக்கும் இந்தி ஒழிப்பது என்பது மாத்திரமே காரணம் அல்ல, என்பதை உணர்ந்து அடக்குமுறை துவக்குங்கள். என் முயற்சி, தொண்டு எல்லாமுமே நியாயமானது அவை வெற்றிபெற வேண்டும் என்பதற்கேயாகும். அதற்கு நீங்கள் எந்தவித தடங்கலும் குந்தகமும் செய்யக்கூடாது என்பதற்கே யாகும்.

உங்கள் எண்ணத்தை, நடத்தையை நீங்கள் பதவிக்குவந்த இந்த சமார் ஒரு ஆண்டாக நான் கவனித்து வருகிறேன். என் விஷயத்தில் இதுவரை பார்ப்பன ஆதிக்க மந்திரிகளால் செய்யப்படாத, காரியங்களை நீங்கள் செய்தீர்கள். அவர்கள் அனுமதித்து வந்த காரியங்களை நீங்கள் தடுத்தீர்கள். அவர் காட்டிய சலுகையைகூட நீங்கள் காட்ட மறுக்கிறீர்கள்.

இதற்குக் காரணம் என்ன? உங்கள் பதவிப்பித்து அல்லது பயங்காளித்தனம் தானே? இல்லாவிட்டால் நான் என்ன அயோக்கியனா? சமுதாயத்துக்கு, அரசியலுக்கு ஆபத்தானவனா? என்னமோ செய்யுங்கள்!

"விடுதலை"

★

நல்ல வேளையாக மாநாட்டினர் எனக்கு அழைப்பு அனுப்பியிருந்தனர். அழைப்பு அனுப்பாதிருந்தாலும் அழையா வீட்டுக்கு நுழையாச் சம்மந்தி என்ற கவுரவத்தைக் கூட விட்டுக்கொடுத்து விட்டு நான் மாநாட்டில் வந்து அவசியம் கலந்துகொண்டேயிருப்பேன்.

ம. பொ. சி.

[5ம் பக்கத் தொடர்ச்சி]

சுந்தரம் எழுந்து சென்றான். "என்ன, என்றுமில்லாமல் சன்னல் கதவெல்லாம் மூடிக்கிடக்கின்றனவே" என்று சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்தான். மறுகணமே, ஏதோ ஒரு உருவம் கதவைத் தாளிட்டுக் கொண்டு, அய்யோ, அய்யோ, அப்பா என்று சப்தம் கிளப்பியது. கதவைத்திறக்க வொட்டாமல் கட்டிப் பிடித்துக் கொண்டது சுந்தரத்தை அந்த உருவம். ஆசிரியர் மாணவர் கூடுவதற்கும், சுந்தரம் உருவத்தைத் தள்ளிவிட்டு வெளியே வருவதற்கும் நேரம் ஒத்திருந்தது. கதவுகள் திறக்கப்பட்டன. மேசையடியில் மூர்ச்சையற்றுக் கிடந்த உருவத்தைத் தூக்கிப்பார்த்தார்கள் சிறுமிகள். அரை நிர்வாணத்தோடு கிடந்த அம்புஜம், தலையாசிரியரின் அருந்தவப் புதல்வி.......

5-ஆண்டுகள் சிறையிலிருந்தான் சீர்திருத்தவாதி, பலாத்கார முறையில் கற்பழித்தானென்ற குற்றத்துடன். வெளியில் வந்தான் அவன் சிந்தனையாவும் சீரழிக்கப்பட்டுவிட்டது, ஆரியச் சிறுக்கியால். சுந்தரத்தின் மீது கொண்ட வெற்றியால் கிடைத்த 10000-ரூபாயை வரதட்சிணையாகக் கொடுத்து வடமங்கலம் இனாம்தாரின் மருமகளாகிவிட்டாள் அம்புஜம். ஆனால் சுந்தரம்! என்று கூறிவந்த நண்பன் நடராசன் தேம்பித் தேம்பி அழுதான். ஏனப்பா அழுகிறாய், வேலாயுதத்தின் கதியை விடவா? கவலையை விடு என்றேன். சிறிது தூரத்தில் 'ஒழிக', 'வாழ்க' என்ற சப்தம் கேட்டு, வேகமாகச் சென்றோம். பாண்டியன் தலைமையில் இந்தி எதிர்ப்பு இயக்கம் புறப்பட்டுக்கொண்டிருந்தது. பக்கத்திலே பலராமன், பத்மநாபன் இருவரும். "பார்த்தாயா நண்ப! அக்கூட்டத்தை. சென்னைக்குக் கால்நடையாகச் செல்கிறார்களாம்" என்றேன். அதுதானப்பா! சுதந்தரமற்றவன் போல் கிடக்கும் சுந்தரம் தெளித்த விதைகள்" என்றான் நண்பன்.

★

திராவிட நாடு எப்படிப் பிரியமுடியும் என்று உனக்குச் சந்தேகம் தோன்றுகிறதா? போய் ஜின்னாவின் சட்டாம்பிள்ளையைக் கேள். தக்க பதில் கொடுப்பார். முனிஸிபாலிடி எலெக்ஷனிலேயே ஓரளவுக்குத் தெரிந்திருக்குமே உன் சர்க்காருக்குள்ள ஆதரவும், எதிர்ப்பும். நீ அவ்வப்போது பேசிவருவதைப் பார்த்தால் இந்தி நுழைப்பில் உனக்கே போதிய இச்சையில்லை என்பது நன்றாக விளங்குகிறதே!

கவிஞர்.

[4ம்பக்கத் தொடர்ச்சி]

பிறகு மறுபடியும், பெரியார் அவர்கள் ஹைதராபாத் நிலையைக் குறித்தும் நமது போராட்டத்தைக் குறித்தும் பேசியதாவது:—

“இப்போது ஹைதராபாத்தில் ஒரு பெரும் குழப்பம் நடைபெற்று வருகிறது. அக்குழப்பம் இந்திய சர்க்காருக்கும் நைஜாம் சர்க்காருக்கும் இடையே உள்ள அபிப்பிராய பேதத்தால் ஏற்பட்டிருக்கும் குழப்பமாக இல்லை. அங்குள்ள சில குண்டர்களால் நடத்தப்பட்டுவரும் கட்டுப்பாடான காலித்தனத்தை நைஜாம் சர்க்காரால் அடக்கமுடியவில்லை. சரியான சமயத்தில் உள்ளே புகுந்து காலித்தனத்தை அடக்காவிட்டால், அது எங்கு ஹைதராபாத்தையும் தாண்டி இந்தியாவிலும் பரவிவிடுமோ என்ற கவலை ஏற்பட்டிருக்கிறது.

## ஹைதராபாத் குண்டர் ஒழிப்பு அக்கரை நமக்கில்லையா?

அதனால் இந்திய சர்க்காருக்கும் கலகக்காரருக்கும் போராட்டம் நடைபெற இருக்கிறது. அப்போராட்டம் மிகப்பெரிய போராட்டமாக வளர்ந்து விடவும் கூடும். அது பெரிய யுத்தம் மாதிரியே நடக்கநேர்ந்தாலும் நேரிடலாம். அப்படிப்பட்ட நிலை நேரக்கூடுமானால் அதில் நாம் சம்மந்தப்படாமல் இருக்கமுடியாது. அப்படிப்பட்ட சமயத்தில் நமது போராட்டத்தை ஒருவேளை நிறுத்தவேண்டி ஏற்படலாம். அதற்கும் நீங்கள் தயாராக இருக்கவேண்டும். நமது சார்பும் நம்மக்கள் சார்பும் கட்டாயம் இந்திய சர்க்கார் சார்பாகத்தான் இருக்கும்.

ஹைதராபாத்தில் நடக்கும்போராட்டம் நவாப்பின் சர்க்கார் சார்பாக நடத்தப்படும் போராட்டமாக இல்லை. நவாப்பையும் சேர்த்தழிக்கக்கூடிய போராட்டமாகத்தான் அது காணப்படுகிறது. இதைத் திராவிடநாட்டு முஸ்லிம்கள் நன்கு மனதில் இருத்திக்கொள்ள வேண்டும். நைஜாம் எதிர்க்கப்படுகிறார் எனவே முஸ்லிம்கள் எதிர்க்கப்படுகிறாகள் என்று கருதியாரும் ஹைதராபாத் போராட்டத்தை ஹிந்து முஸ்லிம் போராட்டமாக ஆக்கி இந்நாட்டில் குழப்பத்தை உண்டாக்கிவிடக்கூடாது. ஹைதராபாத்தைச் சுற்றி திராவிடர்களாகிய நாம் தான் இருக்கிறோம். தெற்கே நம் மாகாணமும் வடக்கே மைசூரும் தான் ஹைதராபாத்தைச் சுற்றி இருக்கும் பிரதேசங்களாகும். எனவே நாம் தான் ஹைதராபாத் பிரச்னையால் பெரிதும் பாதிக்கப்படக்கூடியவர்கள் ஆவோம். நான் எதற்காக இதைச் சொல்கிறேன் என்றால், ஹைதராபாத் பிரச்னையைக் காட்டி ஏதாவது விஷமத்தனத்தைக் கிளப்பிவிட்டுத்தான் நமது முயற்சியைக் கெடுக்க ஆட்சியாளர்கள் சூழ்ச்சிசெய்வார்கள். அதற்கு நாம் ஆளாகிவிடக் கூடாது, நாம் ஏமாந்துபோய்விடக்கூடாது என்பதற்காகத்தான் இவ்வளவு கூறுகிறேன்.

## இந்துஸ்தான் நைஜாம் சண்டையுமல்ல. இந்து முஸ்லிம் சண்டையுமல்ல.

மறுபடியும் சொல்லுகிறேன். இது ஹிந்து முஸ்லிம் சண்டையல்ல. ஹிந்துஸ்தான் சர்க்கார் நைஜாம் சர்க்கார் சண்டையுமல்ல. பின் என்ன? குண்டர்களின் காலித்தனத்தை அடக்க, அவர்கள் காலித்தனத்திலிருந்து ஹைதராபாத் மக்களை மீட்க, இந்திய சர்க்காரால் ஹைதராபாத் குண்டர்களோடு நடத்தப்படும் போராட்டமாகத்தான் அது அமையும். நைஜாம் மன்னர் இந்திய சர்க்காருடன் ராஜியாவதைத் தடுத்து நிற்பவர்கள் இக் குண்டர்கள் தான் என்று கூறப்படுகிறது. எனவே குண்டர்கள் மீது நடத்தப்படும் போராட்டத்தில் நாம் கட்டாயம் இந்திய சர்க்காரின் பக்கலில் தான் இருப்போம்.

ஹைதராபாத் குண்டர்கள் முஸ்லிம்கள் என்பதற்காக, நாம் இந்நாட்டு முஸ்லிம்களைச் சண்டைக்கு இழுக்கப்போவதில்லை. இந்நாட்டு முஸ்லிம்கள் யாவரும் நம்மவர்கள், திராவிடர்கள். திராவிடக் கலாச்சாரத்தில் பற்றும், அநுதாபமும், நம்பிக்கையும் உடையவர்கள். அவர்கள் எல்லோரும் நம் நண்பர்கள். நண்பர்களாகவே நாம் எப்போதும் அவர்களைக் கருதிவருவோம். எனவே இந்நாட்டு முஸ்லிம்களும் நம்முடன் சேர்ந்து இந்திய சர்க்காரை ஆதரித்துக் குண்டர்களின் ஆதிக்கத்தை ஒழிக்க முற்படவேண்டியது அவசியம். அதுதான் நன்மையுங்கூட. ஹைதராபாத் குண்டர்கள் மீது போர் இன்றோ நாளையோ துவக்கப்படலாம் நாளை ஹிந்திப்போர், நாளை மறுநாள் ஹைதராபாத் போர் என்று நேரிட்டாலும் நேரிடலாம். இன்றைய ஹைதராபாத் குழப்பத்தால் நைஜாமே உயிரை இழக்க நேர்ந்தாலும் நேரிடலாம், அவரைக் காப்பாற்றும்பொறுப்பு இந்திய சர்க்காருக்கு ஏற்பட்டாலும் ஏற்படலாம் என்று ஒரு முக்கியமான பிரமுகர் என்னிடம் கூறினார். சமீபத்தில் சென்னையில் மறுபடி ஏ. ஆர், பி. துவக்கப்படவும் கூடும். அப்படி நேர்ந்தால் நமது கலாச்சாரப்போராட்டத்தை ஒரு சிறிது காலம் ஒத்திவைக்க நேரிட்டாலும் நேரிடலாம் என்பதைத்தவிர்த்து, வேறு எந்தக் காரணத்திற்காகவும் வெற்றி கிடைக்கும் வரை போராட்டம் நிறுத்தப்படமாட்டாது. வெற்றி கிடைக்கவேண்டுமானால் அது சீக்கிரத்திலேயே கிடைக்கவேண்டுமானால் நமக்கு அளவற்ற பொறுமை வேண்டும். கட்டுப்பாடு வேண்டும். சாந்தமும் சமாதானமுமாக நாம் நடந்து கொள்ளவேண்டும். இவைதான் நம் வெற்றிக்கு அடிப்படை.

## பொதுமக்கள் அநுமதி இல்லையாம்.

மறியல் நடத்தும் தொண்டர்களுக்கு அருகாமையில் இருக்க பொதுமக்கள் அநுமதிக்கப்படமாட்டார்கள் என்று ரெட்டியார் கூறியிருக்கிறார். இதற்கு இரண்டு அர்த்தம் கொடுத்துக் கொள்ளலாம். ஒன்று “நாங்கள் தொண்டர்களை நன்றாக அடிக்கப்போகிறோம். அதில் ஏன் நீங்கள் பங்கு கொள்ளப்போகிறீர்கள்” என்று கூறுவதாக இருக்கலாம். அல்லது “நாங்கள் அவர்களைச்சிறை செய்யப்போகிறோம். எனவே அருகில் இருந்து ஏன் கலகத்தை விளைவிக்கப் போகிறீர்கள், எட்டி நில்லுங்கள்” என்று கூறுவதாக இருக்கலாம். நாம் நல்ல அர்த்தத்தையே எடுத்துக் கொள்வோம். அடிக்கமாட்டார்கள் அடிபடாமலே பதவிக்கு வந்த காரணத்தால் என்றே கொள்வோம். எப்படியேயாயினும் மறியல் தொண்டர்கள் தவிர்த்து, மற்றவர்கள் அருகில் வராமல் இருப்பதுதான் நல்லது.

## அடிபடவும் சிறைபுகவும் ஆசையா? அவற்றைப் பார்ப்பதற்கு ஆசையா?

யாராவது தொண்டர்களாக வர, அடிவாங்க அல்லது சிறைப்பட ஆசைப்பட்டால் எங்கள் மூலமாக வாருங்கள். அடிபடவோ, சிறைப்படவோ வசதிசெய்து கொடுக்கிறோம். அவர்களுக்கும் ஆசை தீர அடிக்க வசதி செய்து கொடுக்கிறோம். வேடிக்கை பார்க்கவேண்டுமானாலும் வாருங்கள். வந்தால் பேசாமல் அமைதியாக எட்டி நின்று கொண்டு பாருங்கள். எல்லா நடவடிக்கைளும் பேசாத படக்காட்சியேபோல் நடைபெறட்டும். ஏராளமான ராணுவத்தைத் தருவித்து வைத்துள்ளார்கள். அவர்களை ஏற்றிவர நிறைய வண்டிகளும் வைத்துக்கொண்டுள்ளார்கள். எனவே பயமில்லை. உங்கள் ஒத்துழைப்பிருந்தால் போராட்டம் மிக வெற்றிகரமாகவே நடைபெறும்.

## தனலட்சுமியாரைத் தடுத்தோம்.

நாளை போராட்டம் துவங்குகிறது. தாய்மார்களும் அவ்வப்போது போராட்டத்தில் கலந்து கொள்வார்கள். நாளையே கூடத் தோழர் வேலாயுதம் மனைவியார் தனலட்சுமி அம்மையார் அவர்கள் மறியல் செய்யப்போகிறார்கள். அம்மையார் தனித்தல்ல. மற்ற தொண்டர்களோடு தானும் தன் வயிற்றிலுள்ள 7 மாதச் சிசுவும், தன் இடுப்

பில் 3 வயதுக் குழந்தையும் ஆக மற்றும் இருவருடன் அம்மையார் மறியல் செய்ய முற்பட்டுள்ளார்கள். அவருக்குச் சமாதானம் சொல்லிப் பார்த்தோம். ஒப்புக்கொள்ளாததால் அவர்களின் வேண்டுகோளுக்கு ஒப்புதல் தெரிவிக்காமல் இருக்க முடியவில்லை. எனவே நாளைப் போராட்டத்தில் அவர்கள் கலந்து கொள்வார்கள்.

### வெற்றி உங்கள் கையில்தான்.

எனவே போராட்டத்தின் வெற்றி இனி உங்கள் கையில்தான் இருக்கிறது. நீங்கள் அமைதியாக நடந்து கொள்ளுங்கள். ஊர்வலத்தில்கூட அதிகமான பேர்கள் கலந்து கொள்ளாதீர்கள். ஒரு வேளை அதையே சாக்காக வைத்துக்கொண்டு இயக்கத்தைத் தடை செய்யத் துணிவார்கள் சர்க்காரார். எனவே அமைதியும் கட்டுப்பாடும் உங்களிடையே நிலவட்டும். குழந்தைகள் இதுசமயம் ஆத்திரப்பட வேண்டியதில்லை. அவசியமான போது அழைக்கிறோம். அப்போது வாருங்கள். சென்னை முடிந்தபிறகுதான் வெளியூர்களிலிருந்து ஆட்களைத் தருவிக்க நினைக்கிறோம். அழைப்பு வரும்வரை பொறுமையோடு இருங்கள். கண்டிப்பாய்க் கலவரம் இல்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். "இந்தப் போராட்டத்தைப் போன்ற ஒரு சாத்வீகப் போராட்டத்தை நான் இது காறும் கண்டதே இல்லை" என்று பார்ப்பனர்கள் தமக்குள்ளாகவேபேசிக் கொள்ளும் அளவுக்குப் பொறுமையோடு நடந்து கொள்ளுங்கள். பார்ப்பனர்களைப்பற்றிய எதிர்ப்புப் பேச்சு வராமல் பார்த்துக், கொள்ளுங்கள். வடநாட்டான் தென்னாட்டான் என்ற பேச்சே தலை தூக்கி நிற்கட்டும். வடநாட்டானை எதிர்ப்பதிலேயே, ஒழிப்பதிலேயே உங்கள் முழுக் கவனத்தையும் முயற்சியையும் செலுத்துங்கள். உங்கள் முயற்சியை வடநாட்டான் பக்கம் திருப்பி விட்டு விட்டுப் பார்ப்பனர்களின் நம்பிக்கையைப் பெறுங்கள். அவர்களுடைய தந்திரம் உங்களுக்குப் பதிலாகக் கிடைக்கும். வடநாட்டானும் சீக்கிரம் ஒழிய வழி பிறக்கும் என்று கூறி முடித்தார்.

★

இங்குள்ள வைத்தியநாதய்யர், வரதாச்சாரியாரின் கோஷ்டியார் இத்திராவிடநாட்டின் கலைகளையும், கலாச்சாரத்தையும்அடியோடு அழித்து இந்நாட்டை வடநாட்டுக்கு வால் நாடாக்கப்பார்க்கிறார்கள். அதுதான் மர்மமே ஒழிய, "ஹிந்தி தேசியமொழி ஆகவே எல்லோரும் படிக்கவேண்டும்" என்று கூறுவதெல்லாம் முழுப் பித்தலாட்ட வார்த்தைகள்.

பெரியார்,

[3ம் பக்கத் தொடர்ச்சி]

சாங்க ஆணையோ தேவையில்லை. தாயாருக்கு அவளுடைய குழந்தையை வளர்ப்பதற்கு யாருடைய போதனையும் தேவையில்லை. அதுபோலவே அந்தந்த நாட்டு மக்களுக்கும் அவர்களுடைய தேசிய மொழியைப் பரப்புவதற்கு யாருடைய உத்திரவும் தேவையில்லை. அது தானாகவே பரவும். யார் தடுத்தாலும் முடியாது.

இந்தி தேசிய மொழியாக இருப்பது உண்மையானால், அதற்கு ஏன் இவ்வளவு பாதுகாப்பு? பண்டித ஜவகர் வந்து அதனைத் தங்கையாக வைத்துக்கொள்ளச் சொல்வதேன்? தங்கையைப் பாதுகாப்பதற்கு ஜவகர் சிபார்சு எதற்காக? தமிழர்கள், தங்கைகளை விரட்டிவிடும் தறுதலையர்கள் என்று கருதினாரா? அல்லது, இந்தியை மனைவியாக வைத்துக் கொள்வார்களோ, என்னவோ, என்ற அய்யத்தினால் கூறினாரா? அவர் கூறியதன் கருத்து இவற்றில் எதுவும் அல்ல. தங்கையாக்கி, தமக்கையாக்கி, உறவு முறைபாராட்டி, முடிவில் அதிகாரம் செய்வதுதான் இராஜதந்திரிகளின் இயல்பு. அக்காலத்தில், ஆங்கிலேயன் இப்படித்தான் செய்தான். தந்திரமாக இங்குள்ளவர்கள் தலையில் இங்கிலீசை ஏற்றி வைத்த காரணத்தினால்தான், அவர்கள் 200 ஆண்டுகாலமாக இந்நாட்டை ஆளமுடிந்தது. அக்கரையாக ஆங்கிலம் படித்த மேதாவிகள் எல்லாரும், தேசீய உணர்ச்சி கெட்டவர்களாகி,

"உத்தியோகம் கொடு; அல்லது உயிரை மாய்த்துவிடு" என்ற பல்லவியைப் பாடிக்கொண்டு ஆங்கிலேயன் காலடியில் கிடந்தார்கள். இதை நான் சொல்லவில்லை. பிரபல காங்கரஸ்காரரான காலஞ்சென்ற லாலாஜபதிராய் என்பவர் தமது "துரதிர்ஷ்ட இந்தியா" என்ற நூலில் ஆங்கிலேயரின்ஏகாதிபத்தியச் சூழ்ச்சியைப் பின்கண்டவாறு விளக்குகிறார்.

"18-வது நூற்றாண்டின் இறுதியில் சார்லஸ் கிராண்டு என்பார், இந்தியர் கல்வி விஷயமாக வெளியிட்டுள்ள ஒரு நூலில், அவர்கூறியிருப்பதாவது:—"நாம் அமுலில் கொண்டுவரும் புதிய கல்வித் திட்டத்தின் வெற்றியில்தான், நமது க்ஷேமம் அடங்கி இருக்கிறது!"

இன்னும், லார்டு மெக்காலேயுடைய பந்துவும் கம்பெனியில் (East India Compamy) பல உத்தியோகங்கள் வகித்தவரும், பின்னர் சென்னைக் கவர்னர் ஆனவரும், இந்தியா சுப்ரீம் கவுன்சில் மெம்பராக இருந்தவருமான சர். சாரல்ஸ் டிரிவேலியன், என்பவர் 19-ம் நூற்றாண்டுத் தொடக்கத்தில், இந்தியர் கல்வியைப்பற்றி ஒரு புஸ்தகம் வெளியிட்டார். அதில், இந்தியர் கல்விக்காக ஆண்டுதோறும் பத்துலக்ஷம் பவுன் செலவு செய்தால், இந்தியர்கள் பிரிட்டிஷ் ஆட்சிக்கு அடங்கி நேசபாவனையில் இருப்பார்கள் என்று, அவர் முடிவு கூறியிருக்கிறார். அவர் கூறுவதாவது:— "நாம் பின்பற்றப் போகும் முறை (ஆங்கிலத்தைத்திணிப்பது) புதியதல்ல. உரோமர்கள், தமது இலக்கியங்களையும், கலைகளையும், அய்ரோப்பியர்களுக்குக் கற்பித்து, உரோம நாகரீகத்தை அய்ரோப்பா முழுதும் பரப்பி உரோம மயமாக்கியதனால், அய்ரோப்பாமுழுதும் உரோமாபுரிக்கு அடிமையாயிற்று. யுத்தமூலம் பெற்ற வெற்றியை அவர்கள் (ரோமர்கள்) தமது கல்வி முறையால வலுப்படுத்திக் கொண்டார்கள். இத்தாலி, ஸ்பெயின், ஆப்ரிக்கா, கால் முதலிய தேசங்கள், முன்னேற்ற(விடுதலை) உணர்ச்சி எதுவுமின்றி, உரோம நாகரீகத்தைக் குருட்டு நம்பிக்கையுடன் பின்பற்றி, கடைசிவரை உரோம சாம்ராஜ்யத்துக்கு அடிமைகளாகவே இருந்தன. இறுதியில் அந்நாடுகள் உரோமர் பிடியிலிருந்து விடுபட்டது உள்நாட்டுப் புரட்சியால் அல்ல. வெளிநாட்டு அரசியல் நிலையில் ஏற்பட்ட மாற்றம்காரணமாகவே அவைபிரிந்தன. நாம் ஒரு காலத்தில் உரோமர்களுக்கு எவ்வாறு கீழடங்கி இருந்தோமோ, அவ்வாறே இந்தியர்களும் நமக்குக் கீழ் அடங்கிவிடுவார்கள் என்பது நிச்சயம்."

மேலும் சர். டிரிவேலியன் கூறுகிறார்:— "ஆங்கில இலக்கியத்தின் போக்கு, ஆங்கில பந்தத்துக்கு அனுகூலம் செய்யத் தவறாது. ஆங்கில இலக்கியத்தில் பழகிய இந்தியர்களுக்கு நாம் அந்நியர் என்ற உணர்ச்சி நீங்கிவிடும். அவர்கள், (இந்தியர்கள்) நமக்கு ஜன்ம விரோதிகளாக இராமல், பட்சம் மிகுந்த நேயர்களாகவும் ஒத்துழைப்பாளர்களாகவும் மாறி

விடுவார்கள்.

மேலே கண்டவைகள், இந்தியாவில் ஆங்கில ஏகாதிபத்தியம் ஆரம்பித்தபோது, ஆங்கிலேய இராஜ தந்திரிகள் கூறியனவாகும். இவைகளைப்பற்றி லாலா லஜபதி ராய் கூறியிருப்பதையும் காண்போம்.

"பிரிட்டிஷ் அதிகாரிகள் இத்தகைய அரசியல் சூழ்ச்சிகளுடன் ஆங்கிலக் கல்வி முறையை இந்தியாவில் புகுத்தினர்".

"உத்தியோகம் கொடு; அல்லது உயிரை மாய்த்துவிடு" என்னும் மனப்போக்குடையவர்களைச் சிருஷ்டிப்பதே, பிரிட்டிஷ் அதிகாரிகளின் நோக்கமாக இருந்து வருகிறது"

இவ்வாறு, ஆங்கிலேயரின் சூழ்ச்சித்திறனை லாலா லஜபதி ராய் எடுத்துக் காட்டுகின்றார். இந்த எடுத்துக்காட்டுகள் திராவிடர்களுக்கு நல்ல படிப்பினையாகும்.

அன்று ஏகாதிபத்தியத்தை நிலை நாட்ட ஆங்கிலேயர்கள் எவ்வாறு இந்தியாவில் தமது தாய்மொழியாகிய ஆங்கிலத்தை அரசாங்க பாஷையாக ஆக்கினார்களோ, அதுபோலவே, இன்று வடநாட்டு இந்துஸ்தானிகள் தங்களுடையஏகாதிபத்தியத்தைநிலை நாட்ட இந்தியைஅரசாங்கபாஷையாக்க முயற்சிக்கின்றனர். இந்த முயற்சி, இன்று நேற்று ஏற்பட்ட தேவைக்காக முயற்சிக்கப்பட்டதல்ல. நீண்ட காலத்திட்டத்தின்மீது செய்யப்படுவதாகும். அதாவது, ஆங்கில ஏகாதிபத்தியத்தை ஒழிப்பதற்கு என்றைக்கு காங்கரஸ் ஆரம்பிக்கப்பட்டதோ, அன்றே இந்தியை அரசாங்க பாஷையாக்க முயற்சி செய்யப்பட்டு வந்திருக்கிறது. F. K. கான் துர்ரானி என்பவர் தமது "பாக்கிஸ்தான் விளக்கம்" என்ற நூலில் கூறுகிறார்.

"சுமார் முக்கால் நூற்றாண்டாக இந்துக்கள் (வடவர்கள்) உருதுவை யொழித்து, அதற்குப் பதிலாக இந்தியைப் புகுத்த முயன்று வருகின்றனர். இந்துக்களின் மனதைப் பிரதிபலிக்கும் காந்தியார் கூட, முஸ்லிம்கள் ஒரு காலத்தில் இந்நாட்டை ஆண்டனர் என்பதை இந்துக்களுக்கு ஞாபகப்படுத்தக் கூடிய ஒரு வார்த்தையும் இந்துஸ்தானியில் கூடாதென்றும் அவைகளெல்லாம் அடியோடு அகற்றப்பட வேண்டுமென்றும் வெட்கமில்லாமல் கூறுகிறார்."

இதிலிருந்து வடநாட்டில், முஸ்லிம் சமுதாயத்தின் தேசிய உணர்ச்சியை அழிக்கப் பெருமுயற்சி எடுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். இதனை, அதே நூலில் அதே ஆசிரியர் கூறும் கீழ்க்கண்ட உண்மைகள் வலியுறுத்தும்.

"காசியிலுள்ள இந்துத் தலைவர்கள் சிலர், 1867-ல் ஒரு கிளர்ச்சியை ஆரம்பித்தனர். எல்லா சர்க்கார் காரியாலயங்களிலும், நீதி மன்றங்களிலும், உருது மொழிக்குப் பதிலாக 'பிரிஜ்' பாஷையும் 'அரபி' எழுத்துக்குப் பதிலாக 'தேவநாகரி' எழுத்துக்களும் புகுத்தப்பட வேண்டுமெனக் கிளர்ச்சி செய்தனர். கிளர்ச்சியை நடத்திவைக்க வட இந்தியா வெங்கும் கமிட்டிகளும் சபைகளும் நிறுவப்பட்டன"

என்று துர்ரானி கூறுகிறார். 'பிரிஜ்' பாஷை என்பது இந்தியின் சகோதர மொழி என்பதை நம்மவர்கள் உணரவேண்டும்.

இவ்வாறு வடநாட்டில் முஸ்லிம் சமுதாயத்தை நசுக்க எடுத்த இராஜதந்திர முயற்சிகள் அனைத்தும் தோல்வியுற்றன. அத்தோல்வியின் அடையாளமே, பாகிஸ்தான் என்பதை நாம் இங்கு எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

திராவிட நாட்டில் இந்தியைப் புகுத்தும் நோக்கமும் திராவிடர்களின் தேசிய, சமுதாய உணர்ச்சியை வீழ்த்தி, இந்துஸ்தான் அரசியலில் நிரந்தர அடிமைகளாக அழுத்திவைப்பதற்கேயாகும். இவ்விடத்தில், "உரிமைக்கு வேங்கடமும், உறவுக்கு இமயமும்" என்று கூறிக்கொண்டு இரண்டு மலைகளின் மேல் காலை ஊன்றிக்கொண்டிருப்பவர்கள் சிந்திக்கவேண்டும். இத்தகைய அரசியல் சூழ்ச்சியின் அடிப்படையில் திணிக்கப்படும் இந்தியை, இமயத்தில் காலை ஊன்றிக்கொண்டு எதிர்த்தொழிக்க முடியுமா? என்ற கேள்வியை அவர்கள் தமக்குள்ளேயே கேட்டு விடைகாண வேண்டும். அவர்களுக்கு இப்போது விடை தெரியாவிட்டால், இமயத்தின் ஆக்கிரமிப்பால் விந்தியம் உருண்டு, வேங்கடமும் சாய்ந்து, கன்னியாகுமரி கடலில் விழும் போதாவது, நம்மைப்பற்றியும், நமது தீர்க்க தரிசனத்தைப்பற்றியும் எண்ணித்தான் பார்ப்பார்கள். ஆனால், அப்போது எண்ணிப் பயனடைவது அரிது.

ஏனெனில், காங்கரஸ் தோன்றிய சில காலத்திற்குள்ளாகவே, அது ஒரு ஏகாதிபத்திய இந்துமத வாதிகளின் ஸ்தாபனமாகவே வளர்ந்து வந்திருக்கிறது. அதன் மீது பரஸ்பர நம்பிக்கை கொண்டிருப்பவர்களுக்கு நாம் கூறுவது அருவெறுப்பாகத் தோன்றலாம். அத்தோற்றம், அவர்கள் நம்பிக்கையின் தவறேயன்றி வேறில்லை. அத்தகைய நம்பிக்கை உள்ளவர்கள் 1938ல் பட்டாபி சீத்தாராமையா எழுதிய காங்கரஸ் சரித்திரம் பக்கம் 22ல் கூறுவதைக் கண்டேனும் தெளியவேண்டும்.

"இந்த இயக்கங்கள் (அதாவது பிரம்மசமாஜம், பிரார்த்தனை சமாஜம், ஆரியசமாஜம், திருமதி பெஸண்ட் அம்மையின் பிரமஞான சங்கம், இராமகிருஷ்ணா மிஷன் ஆகியவைகள்) உண்மையில் இந்திய தேசிய மென்னும் கடலில் பல பிரிவுகளாகும். மூட நம்பிக்கைகளையும், தப்பெண்ணத்தையும் போக்கி, பழைய மத இலட்சியமாகிய வேதாந்தத்தைப் புதுப்பித்துப் புனிதப்படுத்தி, அதனைப் புதிய சகாப்த லட்சியமாகிய தேசியத்துடன் கலந்து விடுவதே நாட்டு மக்களின் கடமை. இந்த மகத்தான வேலையை நிறைவேற்றுவதே காங்கரசின் இலட்சியம்"

என்று பட்டாபிசீத்தாராமையா கூறுவாரானால், காங்கரஸ் ஒருமத உத்தாரண ஸ்தாபனம் என்பதை எவராவது மறுக்க முடியுமா? இக்கூற்றைக் காந்தியாரின் படுகொலை வலியுறுத்துகின்றது. எப்படி எனில்; மதவெறியர்களின் போக்குக்கு இடையூறாக இருந்தவர்களில் முதன்மையானவர், காந்தியாரே ஆவார். எனவே, அவர் முதலில் களப்பலியிடப்பட்டார்.

இனி வெகு சுலபமாக இந்து மகாசபை என்கிற மத வெறி ஸ்தாபனம், இந்துஸ்தான் அரசாங்கத் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றி விடும். அப்புறம் நடக்கப்போவதென்ன? ஆரிய மனுஸ்மிருதி ஆட்சிதான் நடக்கப்போகிறது. இதில் யாருக்கும் சந்தேகம் வேண்டியதில்லை. பாகிஸ்தான் பிரிந்துபோன அன்றே, வடநாட்டு ஏகாதிபத்திய வெறியர்கள் காங்கரசைக் கைவிட்டு விட்டார்கள். இன்றைக்கு வடநாட்டில் இந்து மகாசபைக்கு இருக்கும் செல்வாக்கு, காங்கரசுக்கு இருக்க முடியாது. அவ்விதமிருந்தால் காந்தி

யாரின் சாவை, வெற்றிக்கொண்டாட்டம் போல் கொண்டாட முடியுமா? "காந்தி குத்தா மர்கயா'' (காந்தி நாய் செத்தது) என்று தெருவில் கூச்சல் போட்டுக் கொண்டு செல்ல முடியுமா? பொது மக்கள், பெரும்பாலோர் காங்கரஸ்காரர்களாக இருக்குமிடங்களில் இவ்விதம் நடந்தால் தப்பித்துப்போக முடியுமா?

இவற்றிலிருந்து, இந்து மகா சபையானது வடநாட்டில் காங்கரசைவிட வலிமையானதாகவோ, அல்லது காங்கரசுக்குச் சமமானதாகவோ, பலம் பெற்றுள்ள தென்பதை ஒப்புக்கொண்டுதான் தீரவேண்டும்.

## தென்னாட்டார் நிலை.

இந்த நிலைமையிலிருக்கும் வடநாட்டவரோடு பேதமில்லாமல் வாழவேண்டுமென்று தென்னாட்டுப் பார்ப்பனர்கள் கூறிவருகிறார்கள். தென்னாட்டுக் காங்கரஸ்ப் பார்ப்பனருக்கு வடநாட்டுத் தொடர்பு மிக அனுகூலமானதாக இருக்கும். ஏனெனில், பார்ப்பனர்களுக்கு "சமுதாய சீர்திருத்தம் என்பது நஞ்சு போன்றதாகும். சமுதாயச் சீர்திருத்தம் ஏற்பட்டால், நீதியற்ற சமுதாய அமைப்பின் காரணமாக முன்னேறி இருக்கும் பார்ப்பன ஜாதியின் அடிப்படையே கலகலத்து விடும். இவ்வாறு தங்கள் வாழ்வைப் பாழ்செய்ய யார்தான் இணங்குவார்கள்? எனவே, புரட்சிகரமாகச் சமுதாயத்தை மாற்றியமைக்கப் பணிசெய்யும் திராவிடர் கழகத்தை மனமார வெறுக்கிறார்கள். திராவிடர் கழகத்தாரின் திட்டப்படி திராவிடநாடு பிரிக்கப்பட்டால், அன்று பார்ப்பனர்கள், தங்களையும் திராவிடரோடு திராவிடராக வைத்துத்தான் எண்ணி நடக்க நேரிடும். வடநாட்டுத் தொடர்பிலேயே திராவிடநாடு இருந்து வருமானால், பார்ப்பனர்களுக்கு தற்போது அரசியலில் ஏற்பட்டிருக்கும் செல்வாக்குப் பலத்தினால்,திராவிடரின் சமுதாய அரசியல் சுதந்தர உணர்ச்சிகளை நசுக்கி விடலாம். அவ்வாறு நசுக்குவதுடன் நீண்டகாலத்திற்குத் திராவிடர்கள் சமுதாய அரசியல் சுதந்தர உணர்ச்சியைப் பெறமுடியாதபடி அழுத்தியும் வைக்கலாம்.

இவைகளை எல்லாம் சீர்தூக்கி ஆலோசனை செய்துதான், பார்ப்பனர்கள் வடநாட்டுத் தொடர்பை விரும்புகிறார்களே தவிர வேறில்லை. தென்னாட்டுப் பார்ப்பனரின் விருப்பம் போலவே, வடநாட்டுத் தலைவர்களும் ஏகாதிபத்திய வெறி கொண்டவர்களாக இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத் தக்கது. இவைகளையெல்லாம் நன்றாக உணர்ந்தும் காங்கரஸ் திராவிடர்கள், பதவி வேட்டை, சுயநலம் காரணமாக வடநாட்டுக்கும் தென்னாட்டுப் பார்ப்பனர்களுக்கும் வால் பிடித்துக்கொண்டு திரிகிறார்கள்.

## அரசியல் பித்தலாட்டம்.

இன்றுள்ள திராவிட நாட்டு நிலைமையை உள்ளபடி சிந்தித்துப் பார்ப்பவர்களுக்கு இரக்கம் ஏற்படாமல் இருக்காது. திராவிடர்களின் தேசீய உணர்ச்சியை, 'மாகாணப் பற்று' என்று பெயர் சூட்டிக் கேலிசெய்யப்படுகிறது. அதே நேரத்தில், வடநாட்டின் ஏகாதிபத்திய முயற்சிக்கு தேசத்தொண்டு, தன்னலமற்ற தியாகம் என்பன போன்ற, சிறப்புப்பெயர் வைத்துப் பாராட்டப்படுகிறது. திராவிடர்கள் தங்களைத் தனி தேசீய இனம் என்று கூறிக்கொண்டால், அது வகுப்புவாதம் என்று அழைக்கப்படுகிறது. இந்து மதத்தின் அநீதியை எடுத்துச் சொன்னால் அதற்குப் பெயர் பார்ப்பனத் துவேஷமாம். தமிழ் நாட்டில் தமிழ் தான் ஆதிக்கம் செலுத்தவேண்டும். வேற்று மொழி ஆதிக்கம் கூடாது என்று தமிழன் கதறினால், அவனுக்குப் பெயர் அரசியல் விரோதியாம். இவ்வாறு விநோதமான பெயர்களிட்டுத் துர்ப்பிரசாரம் செய்தால், பொதுமக்களின் அறிவுக்கண் எப்பொழுதுமே திறக்காது என்று அரசியல் பித்தலாட்டக்காரர்களின் நம்பிக்கை. என்றைக்காவது உண்மை வெளிப்பட்டுத்தான் தீரும். வெறும் பிரசார பலத்தைக்கொண்டு அரசியலை நடத்திக் கொண்டிருந்த பாஸிஸ வெறியர்கள் அனைவரும் முடிவில் மக்களால் காறியுமிழப்பட்டிருக்கிறார்கள். இது சரித்திரங்கண்ட உண்மை.

வருங்கால உலகத்தில் தமிழன் (திராவிடன்) தலைநிமிர்ந்து வாழ வேண்டுமானால்—வடநாட்டு ஆதிக்க அடிமைத்தனத்தை ஒழிக்க வேண்டுமானால்—இந்தியை ஒழித்தே ஆகவேண்டும். இந்தியை இஷ்டப்பாடமாகக்கூட ஏற்றுக்கொள்ளக்கூடாது. இந்தி நுழைப்பு வடநாட்டு ஏகாதிபத்திய நுழைப்பு என்பதை உணரவேண்டும். உணர்வது மட்டுமல்ல, உணர்ந்ததை உள்ளுரத்துடன் வெளியிடவேண்டும். யாருடைய விருப்பு வெறுப்பையும் பொருட்படுத்தக் கூடாது. எந்த உண்மைக்கும் எதிர்ப்பிருக்கும். எனவே, உண்மை நிலைநாட்டப் படுவதற்கும் உரம்வேண்டும், அஞ்சாமை வேண்டும்.

**எம். எஸ். இராமசாமி.**

# பார்ப்பன ஆசிரியனின் மிருகச் செயல்.

## இதைக் கேட்க நாதியில்லையா?

அரியலூர் 13—8—48

அரியலூர் உயர்நிலைப்பள்ளி 3-ம் பாரமாணவன் கோ. ராஜு 3—8—48 மாலை 5½ மணிக்கு வை. வரதராஜன் என்ற பாரப்பன மாணவனுடன், ஆரிய திராவிடப்பிரச்னை பற்றி தமாஷாக உரையாடியதை, அப்பார்ப்பன மாணவன் தவறாக எடுத்துக்கொண்டு 4—8—48-ல் தலைமையாசிரியரான பார்ப்பனரிடம் ரிப்போர்ட் செய்ததின் பேரில் ஷை திராவிட மாணவனை அப்பார்ப்பன தலைமையாசிரியர் சுமார் 1½ மணிநேரம் வெய்யிலில் நிற்கவைத்து, பிறகு அம்மாணவனைத் தனது அறையில் அழைத்து அவனது ஒரு கன்னத்தில் ஒருகையைவைத்து அணைத்துக் கொண்டு,மற்றொருகையால் மற்றொரு கன்னத்தில் கைசோர்வடையும் வரை அடித்து, பிறகு மற்றொரு கன்னத்திலும் இவ்விதமே அடிக்க மாணவன் பயந்து போய் அங்கேயே சிறுநீர் கழித்துவிட்டான். பிறகு மாணவனை கக்கூசுக்குப் போய் வரச்சொல்லி மறுபடியும் இருகன்னங்களிலும் மாறி மாறி அடித்த பிறகு, மாணவனை கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார். சம்பவம் நடக்கும் போது பள்ளிக்கூடத்தின் 3-வது பீரியட் நடந்து கொண்டிருந்தது. இதற்கு சாட்சிகளும் உள்ளனர். பிறகு வகுப்புக்குப் போகச்சொல்லி மறுபடியும் பள்ளியின் இடைவேளையில் மீண்டும் கூப்பிட்டு கட்டாயப்படுத்தி மன்னிப்பு எழுதி வாங்கிக்கொண்டு தினம் காலையிலும் மாலையிலும் தன்னிடம் வந்து அன்றாட நிகழ்ச்சிகளைச் சொல்லி விட்டுப்போக வேண்டுமென கட்டளையிட்டுள்ளார்.

மாணவன் பட்ட அடியினால் அவனுக்கு உடனே மூளைக்குழப்பமும்

மயக்கமும் நரம்புத் தளர்ச்சியும் சிறிது நேரம் கழித்து காய்ச்சலும் ஏற்பட்டு அன்றிரவே காய்ச்சலோடு வீட்டில் வந்து படுத்து விட்டான். மறுநாள் (5-ம் தேதி) காலை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதில் பார்ப்பனரான டாக்டர் பையன் அடிபடவில்லையென்றும், வெறும் காய்ச்சல் மட்டும் தானென்றும் சொல்லி வெறும் மருந்து மட்டும் கொடுத்து அனுப்பி விட்டார். 9-ம் தேதி சாயங்காலம் மாணவனுக்கு ஜன்னிபிறந்து ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் சென்றதில் இம்பேசண்ட் ஆகச் சேர்க்கப்பட்டு அச்சமயம் மாணவனின் வெப்பநிலை 84° ஆக இருந்து [?] 11-ம் தேதி காலை 103° ஆக இருந்தது. பார்ப்பனரான டாக்டர் மாணவன் அடிபட்டதற்கு சர்டிபிகேட் தருகிறேன், தருகிறேன் என்று 5-ம் தேதியிலிருந்து சொல்லிக்கொண்டே வந்து 10-ம் தேதியன்று "இன்றைய நிலைமைக்குத்தான் அதாவது ஜுரத்துக்கு மாத்திரம்தான் சர்டிபிகேட் தாமுடியும். அடிபட்டதற்கு அடையாளமுமில்லை, காயமுமில்லை. ஆதலால் நான் எப்படிக்கொடுக்கமுடியும்" என்று சொல்லி மறுத்து விட்டார். அரியலூரிலுள்ள மற்ற இரு ப்ரைவேட் டாக்டர்களும் பார்ப்பனர்.

தமிழனுடைய பண்பை அழிக்க, அவனது கலாச்சாரத்தை அழிக்க, தமிழ் மக்களிடத்து இன்று ஏற்பட்டுள்ள புத்துணர்ச்சியை ஒழிக்க இவற்றிற்காகத்தான் இந்தியை நுழைக்கிறார்கள். எனவேதான் ஆட்சியாளரின் குறி 'ராவண காவிய'த்தின் மீது சென்றிருக்கிறது. ஆகவே நமது கலாச்சாரத்தில் கைவைக்கத் துணிந்த இந்த அரசாங்கத்தினரின் போக்கை எதிர்த்து அறப்போர் தொடுப்பதுதான் முறை.

சி. என். ஏ.


குரு தைலம்

மிகச் சிறந்தது

தலைவலி ஜுரம் ஜன்னி முதலிய சகலவித வாய்வு வலிகளுக்கும் நிகரற்றது 210-வியாதிகளுக்கு அரசன்

248

GURUCURES

22



Alvar

டாக்டர். ஏ. மதுரம் சன்ஸ்

குரு மருந்து சாலை, திருச்சிராப்பள்ளி


## குடி அரசுப்பதிப்பக வெளியீடுகள்.

★

| | | | |
|---|---|---|---|
| தத்துவவிளக்கம் | 0 | 12 | 0 |
| புது ரஷ்யா | 0 | 8 | 0 |
| இந்தியாவின் குறைபாடுகள் | 0 | 8 | 0 |
| பெரியார் ஈ. வெ. ரா. வாழ்க்கை வரலாறு. (ஆங்கிலம்) | 0 | 8 | 0 |
| நமக்கு வேண்டியது எது? சமதர்மராஜ்யமா? சுயராஜ்யமா? | 0 | 6 | 0 |
| கர்ப்ப ஆட்சி | 0 | 6 | 0 |
| பெரியார் பெருந்தொண்டு | 0 | 6 | 0 |
| வெளியேறு | 0 | 6 | 0 |
| பகுத்தறிவு அல்லது மரணசாஸனம் 2ம்பாகம் | 0 | 4 | 0 |
| பொதுவுடைமைத் தத்துவங்கள் | 0 | 4 | 0 |
| புராண ஆபாசங்கள் (தருமபரீட்சை) | 0 | 4 | 0 |
| மதப்புரட்சி | 0 | 4 | 0 |
| வால்டையரின் வாழ்க்கைச் சரிதை | 0 | 4 | 0 |
| கார்ல் மார்க்ஸ் | 0 | 4 | 0 |
| சமதர்ம உபன்யாசம் | 0 | 4 | 0 |
| அப்பரும் திருஞான சம்பந்தரும் | 0 | 3 | 0 |
| சோஷியலிசம் | 0 | 3 | 0 |
| இலங்கை உபன்யாசம் | 0 | 3 | 0 |
| இராமாயணப் பாத்திரங்கள் | 0 | 3 | 0 |
| மேல்நாடும், கீழ்நாடும் | 0 | 3 | 0 |
| உழைப்பாளிக்கு ஏன் இவ்வுலகம் இல்லை? | 0 | 3 | 0 |
| இன இழிவு ஒழிய இஸ்லாமே நன் மருந்து! | 0 | 2 | 0 |
| இதிகாசங்கள் புகட்டும் நீதி | 0 | 2 | 0 |
| உண்மைத் தொழிலாளி யார்? | 0 | 2 | 0 |
| திருச்சிப் பிரசங்கம் | 0 | 2 | 0 |
| ராமலிங்க சுவாமி பாடல் | 0 | 2 | 0 |
| தமிழ் இசை-நடிப்புக் கலைகள் | 0 | 1 | 0 |

கிடைக்குமிடம்:-

நாதன் கம்பெனி லிமிடெட்,

கச்சேரி வீதி, ஈரோடு.

Edited, Printed and Published by N. Karivaradaswamy at the Tamilian Press 42, Cutcherystreet, ERODE